# சைவநீதி
# SAIVANEETHI

சைவ வளர்ச்சி கருதிய
செய்தி தரும் மாத இதழ்
MONTHLY MAGAZINE OF
SAIVAISM JULY - AUGUST 1999
பிரமாதி ஆடி







ரூ.25.00

யாழ் இளவாலை

## ஒல்லுடை ஞானவயிரவர் ஆலய
## மகா கும்பாபிஷேகச் சிறப்பிதழ்

1999. 07. 01

உ

சிவமயம்

## கீரிமலை நகுலேஸ்வரர் ஆதீனகர்த்தா
## சிவஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள் அவர்கள்
## வழங்கிய

# அருளாசி



இளவாலை அருள்மிகு ஒல்லுடை ஞான வயிரவர் கோயில் புனராவர்த்தன பிரதிஷ்டா அஷ்டபந்தன பஞ்ச குண்ட மகா கும்பாபிஷேகம் (01.07.99) இனிதே நிகழ ஆசிவழங்குவதிற் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இராணுவ நடவடிக்கை காரணமாக 1992 ஆனி தொடக்கம் ஏறக்குறைய ஐந்து ஆண்டுகள் மக்களின்றி, பூசை வழிபாடின்றிக் காடு மண்டிக் கிடந்த ஆலயம் ஒல்லுடை மக்களின் அயரா உழைப்பாற் புதுப் பொலிவு பெற்றுக் கும்பாபிஷேகம் காண்கின்றது.

''சண்டை முடியுமுன்பு ஆலயங்களைச் செலவழித்துத் திருத்துவதும், கும்பாபிஷேகம் செய்வதும் வீண்வேலை; மீண்டும் பழையபடி அழியா தென்பதற்கு என்ன உத்தரவாதம்", என்பது சிலரின் ஆதங்கம்.

குலதெய்வத்தின் கோயில் பாழடைந்திருக்கத் தங்கள் வீடுகளைப் புனரமைத்து வாழும் நிலை எப்படிச் சாத்தியமாகும். முதலில் ஊரிலுள்ள கோயிலில் பூசை வழிபாடு நடைபெற வேண்டும். மக்கள் அங்கு அமைதி காண வேண்டும். அப்போதுதான் நிம்மதியாக வாழ முடியும்.

''இவ்வுலகு நிலையில்லாதது; தோன்றியதனைத்தும் அழியும்; எமது உடலும் அப்படியே. ஆனால் உயிர் அழியாது; உடலாற் செய்யப்படும் தானதர்மங்கள் முதலான அறச்செயல்கள், புண்ணியங்களாகி உயிரைத் தொடர்ந்து நல்லகதியைத் தரும். ஆதலால் வாழ்வில் திருப்பணி செய்யும் வாய்ப்பைப் பெற்றவர்கள் புண்ணியவான்களே.

''நன்றே செய்ம்மின், அதனையும் இன்றே செய்ம்மின்" என்பதைச் செயலில் காட்டிய ஒல்லுடை வாழ் மக்கள் வயிரவப் பெருமானின் நல்லருள் பெற்று இனிதே வாழ்வார்களாக.

உ
சிவமயம்
"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சைவநீதி

மலர் 3 பிரமாதி ஆடி சைவசமய வளர்ச்சி கருதி வெளிவரும் மாத இதழ் இதழ் 4

கௌரவ ஆசிரியர்
ஞானசிரோமணி
சைவப்புலவர்மணி, வித்துவான்
திரு. வ. செல்லையா
Mr. V. Chellaiah

நிர்வாக ஆசிரியர்
திரு. செ. நவநீதகுமார்
Mr. C. Navaneethakumar

பதிப்பாசிரியர்
திரு. பொ. விமலேந்திரன்
Mr. P. Vimalendran
Unie Arts (Pvt) Ltd
Tel.: 330195, 478133
E-mail:uniearts@slt.lk

மதியுரைஞர்
பண்டிதர் ச. சுப்பிரமணியம்
Pandit S. Subramaniyam

திரு. பொ. பாலசுந்தரம்
Mr. P. Balasundaram
Trustee
Sri Varatharaja Vinayagar Temple, Kotahena

திரு. ராஜராஜேஸ்வரன் தங்கராஜா
சட்டத்தரணி
Mr. Rajarajeswaran Thangaraja
Attorney-at-Law

திரு. கு. மகாலிங்கம்
Mr. K. Mahalingam
Sivayogaswami Trust Fund

திரு. அ. கந்தசாமி
Mr. A. Kandasamy
Chairman, U. P. S.

42, Janaki Lane,
Colombo 4.

## அம்மானுக்கு அன்பர்

இறைவன் குரு லிங்க சங்கமம் ஆகிய மூவிடத்தும் இருந்து அருள் புரிவான். சங்கமம் என்பது சிவனடியார் திருக் கூட்டம். சிவசின்னம் அணிந்து மன்றாடு மலர்ப் பதத்தை மறவாத சிந்தையர் அடியவர். இவர்களைக் கண்டதும் கை கூப்பி வணங்க வேண்டும். "மாலற நேயம் மலிந்தவர் வேடமும் ஆலயந்தானும் அரனெனத் தொழுமே" என்கிறது சிவஞான போதம். அடியவரை வழிபடுவது இறைவழிபாடாகும். அவர்களுக்குக் கொடுக்கும் திரவியம் இறைவனுக்குக் கொடுப்பதற் கொப்பாகும். "நடமாடக் கோயில் நம்பர்க் கொன் றீயிற் படமாடக் கோயில் பகவற்க தாமே" என்பார் திருமூலர்.

அடியவர் வழிபாட்டை நெறிப்படுத்த அவதரித்தவர் சுந்தரமூர்த்தி நாயனார். "தீதகன்றுலக முய்யத் திருவவதாரஞ் செய்தார்" சுந்தரர் என்றார் சேக்கிழார். அடியவரை வழிபடாத தீமை அகன்றது சுந்தரர் வரவால். தியாகேசப் பெருமானைத் தரிசிக்கச் சென்ற சுந்தரர் தேவாசிரிய மண்டபத்திற் கூடியிருந்த அடியவரைக் கண்டு இவர்கட்கு யான் அடியானாகும் நாள் எந்நாளோ? என்று எண்ணி இறைவனை வணங்கும் போது இறைவன் அடியவர்களைப்பாடு எனப் பணித்தார். எப்படிப் பாடுவேன் என்ற சுந்தரருக்கு இறைவன் "தில்லை வாழ் அந்தணர் தம் மடியார்க்கு மடியேன்" எனப் பணிக்கச் சுந்தரர் திருத்தொண்டர் தொகையை விரித்தார். அப்பதிகத்தைக் கேட்டு மகிழ்பவர் கடவுளுக்கு அன்பராவார் என்பது சுந்தரர் வாக்கு. ஆரூரன் அடிமை கேட்டுவப்பார் ஆரூரில் அம்மானுக் கன்பராவாரே.

எம்மை ஒருவர் வணங்கினால் என்னை அவர் வணங்குகிறார் என்று பெருமை கொள்ளக் கூடாது; என்னுள் இருக்கும் இறைவனுக்கு அந்த வணக்கம் என்று நினைக்க வேண்டும். ஆருயிர் அனைத்தும் மேவி இருப்பவன் இறைவன் ஆகவே மற்றவர்கள் மனம் நோகும் படியான சொல், செயலைத் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும். நான்தான் பெரியவன், சிறந்தவன் என்ற எண்ணம் ஒருபோதும் எண்ணக் கூடாது.

நான் பெரியவன் என்று சிரித்த பிரமாவின் தலையைக் கொய்து அக்கபாலத்தில் அகந்தை கொண்ட திருமாலின் உதிரத்தை ஏற்று அவ்விருவரின் அகந்தையை அடக்கியவர் வைரவர். இம்மலர் ஒல்லுடைப்பதி அருள்மிகு ஞான வைரவப் பெருமான் ஆலயக் கும்பாபிஷேகச் சிறப்பு மலராகி சிவத்தில் வேறாகாத வைரவப் பெருமானின் பெருமைகளை எடுத்தியம்புகின்றது. வைரவப் பெருமான் அருள் அனைவருக்கும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

உ

சிவமயம்

# சைவநீதி

## பொருளடக்கம்


1. அம்மானுக்கன்பர்
– ஆசிரியர் ............................................................................ 1

2. பொருளடக்கம். ................................................................................. 2

3. யாழ் இளவாலை - ஒல்லுடைப்பதி அருள்மிகு ஞான வயிரவர் ஆலய வரலாறு.
– சைவப் புலவர் சு. செல்லத்துரை ................................................. 3

4. இளவாலை ஒல்லுடைப்பதி அருள்மிகு ஞான வைரவப் பெருமான் போற்றித் திருவகவல்.
– இலக்கிய கலாநிதி பண்டிதர் மு. கந்தையா....................................... 5

5. அருள்மிகு ஒல்லுடை ஞான வைரவர் ஆனந்த மாலை
– சைவப்புலவர் சு. செல்லத்துரை ...................................................... 7

6. ஒல்லுடைப் பதிகம்.
– மட்டுவில் ஆ. நடராசா ........................................................................ 9

7. யாழ். இளவாலை அருள்மிகு ஒல்லுடை ஞான வைரவர் மும்மணி மாலை.
– பண்டிதர் சி. அப்புத்துரை ................................................................. 10

8. அருள்மிகு ஒல்லுடை ஞான வயிரவர் கோயிற் பரிபால சபையினர். ..................... 13

9. வயிரவர் வழிபாடு.
மகாமகோ உபாத்தியாய, இலக்கிய கலாநிதி பண்டிதர் மு. கந்தையா ...14

10. மணிவாசகம்.
– இயற்றமிழ் வித்தகர், பண்டிதர் ச. சுப்பிரமணியம்......., ........... 20

11. சேரர் பிரானின் சிவ அன்பு.
– சிவசண்முகவடிவேல் ........................................................................ 22

12. திருவாசகச் சிந்தனை - குமிற்பத்து.
– பண்டிதர் சி. அப்புத்துரை .................................................................. 25

13. தெளிவான சமய அறிவும் எழிலான வாழ்க்கை அமைவும்.
– முருக வே. பரமநாதன் ......................................................................... 27

14. சிவாலய தரிசன இயல்.
– ஆறுமுகநாவலர் ..................................................................................29


சைவநீதி இதழில் வரும் கட்டுரைகளிலுள்ள கருத்துக்களுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர் – இதழ் நிர்வாகிகள்.

# யாழ். இளவாலை – ஒல்லுடைப்பதி அருள்மிகு ஞானவைரவர் ஆலய வரலாறு

சைவப் புலவர் சு. செல்லத்துரை

யாழ்ப்பாணத்தின் வடபால் இளவாலை வடக்கில் உள்ள குக்கிராமமாகிய காடிவளையில் அமைந்தது ஒல்லுடைப்பதி. வடபால் காலமெல்லாம் விளைவு தரும் தரவையெனும் விளை நிலமும், மேல்பால் காலபோகத்திற் செந்நெல்லும் ஏனைய காலத்தில் உப உணவுப் பயிர்களும் விளையும் நீர்வள, நிலவளம் மிக்க இளவாலை வயலும், நாற்புறமும் பனை, தென்னந் தோப்புகளும், முக்கனி, வெற்றிலை விளையும் தோட்டங்களும் சூழ்ந்த ஒல்லுடைப் பதியில், இற்றைக்கு ஐந்து தலை முறைக்கு முன் வாழ்ந்த 'வயிரவி' எனும் அருளாளரால் ஒரு பூவரச மரத்தடியிற் சூலம் வைத்துப் பூசை செய்து தொடங்கப்பட்டது இவ்வாலயம் என்பது செவிவழிச் செய்தி.

படிப்படியாகக் கட்டிடங்கள் அமைக்கப்பட்டுக் கும்பாபிஷேகங்கள் செய்யப்பட்டு ஆலயம் வளர்ச்சி கண்டது. அதன் பயனாய் வழிபடுவோரின் வாழ்க்கைத் தரமும் உயர்ந்தது. மடாலயமாக இருந்த ஆலயத்தை ஸ்தூபி விமானத்துடன் கூடிய ஆகம அமைவுக்கேற்றதாய் அமைக்க வேண்டுமெனும் எண்ணம் உதித்தது.

## புதிய கோயில்

1980 இல் தொடங்கப்பட்ட திருப்பணி அதிசயிக்கத் தக்க வகையில் வளர்ச்சி கண்டது. அழகிய தெய்வீக சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய விமானத்தையுடைய கருவறையும், அர்த்த மண்டபமும், எழில் மிக்க அன்னங்கள் தாங்கி நிற்கும் கும்ப மேடையும் எழுந்தருளி மூர்த்தி கொலுவிருக்கும் விமானத்துடன் கூடிய மகா மண்டபமும், ஓம குண்டத்துடன் கூடிய நிர்த்த மண்டபமும், நந்திபலிபீடம், வசந்த மண்டபம் என்பனவும் தெய்வீகப் பொலிவுடன் உருவாகின.

விநாயகப் பெருமானுக்கும், நாக தம்பி ரானுக்கும் சிற்ப விமானத்துடன் கூடிய பரிவாரக் கோயில்களும் உருவாகின. ஆலய அமைப்பு, சிற்ப வேலைகள், வர்ணந் தீட்டல் முதலான அனைத்து வேலைகளையும் தெய்வீகக் கலையழகுடன் கலைநகர் சிற்ப வித்தகர் சீ. செந்தூர்ராசா அற்புதமாக அமைத்துத் தந்தார். மடைப்பள்ளி, வாகனசாலை, களஞ்சிய அறைகள் அமைக்கப்பட்டன.

ஒரு வீதியை மட்டும் கொண்டிருந்த ஆலயத்துக்கு, இரண்டாம் வீதியும் அமை வதற்காகக் கிழக்கு வீதிக்குத் திரு. ச. கந்தையா திரு. க. கணபதிப்பிள்ளை என்போரும், தெற்கு வீதிக்குச் சிவ ஸ்ரீ சண்முகநாதக் குருக்களும், மேற்கு வீதிக்குத்திரு. அ. இரத்தினமும் திரு. அருணாசலமும் பங்காளரும் திருமதி க. தெய்வானைப்பிள்ளை அவர்களும், வடக்கு வீதிக்குத் திரு. க. இ. வேலுப்பிள்ளை அவர்களும் தாராளமனத்துடன் தங்கள் காணிகளில் தேவையான அளவைக் கொடுத்தனர்.

முதலாம் வீதிக்கு மதிலும், கிழக்கு, தெற்கு வாயில்களுக்குப் பாதுகாப்பான கேற்றுகளும் அமைக்கப்பட்டன. வீதிகளுக்கு மண நிரப்பப்பட்டுச் செப்பனிடப்பட்டன. மெய்கண்டான் வீதியிலிருந்து ஆலயத்துக்கு வரும் ஒல்லுடை வீதியும் அகல மாக்கப்பட்டது. இவ்வாலய உருவாக்கத்திற்கு வழிபடுவோர் செய்த சிரமதானப் பணி நிகரிலாதது.

1982 வைகாசி விசாக நன்னாளில் வைரவப் பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் மகா கும்பாபிஷேகம் கோலாகலமாக கீரிமலை நகுலேஸ்வரர் ஆதீன கர்த்தா சிவஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெற்றது.

## மணிக்கோபுரம்

தொடர்ந்து மணிக் கோபுரம் கட்டப்பட்டது. வெளிக்கிணறு இருந்த இடத்தில், கிணற்றின் அடியிலிருந்தே அமைக்கப்பட்ட அற்புதமான கலைக் கோலங்களுடன் கூடிய 45 அடி உயரமான மணிக் கோபுரத்தில் 51 கிலோ நிறையுடைய கண்டாமணி அதே ஆண்டு கார்த்திகை மாத நன்னாளில் ஓங்கார நாதத்தை ஒலிக்கத் தொடங்கியது.

இந்த மணிக் கோபுரம் இவ்வூரவரான மலேசியா "டத்தோ" வயிரவ நாதர் குடும்பத்தினராற் கட்டப்பட்டது.

## கிணறுகள்

திருமஞ்சனக் கிணறு சைவபூசணம் சி. கார்த்திகேசு அவர்களால், தன்மகனின் நேர்த்திக்காக அமைக்கப்பட்டது. முன்னைய திருமஞ்சனக் கிணறு கோயில் தேவைக்கு விடப்பட்டது. வெளிவீதியில் கோயிற் பொதுக்கிணறு

எல்லார்க்கும் பயன்படக் கூடியதாக அமைக்கப்பட்டது. மூடப்பட்ட பங்குக்கிணற்றுக்குப் பதிலாகப் பங்காளர் காணியில் வெட்டப்பட்ட கிணற்றுக்கு அவர்களுக்குரிய பங்குச் செலவு கொடுக்கப்பட்டது.

விழாக்கள்

வைகாசி விசாகத்திலிருந்து பன்னிரண்டு நாட்கள் அலங்கார உற்சவமும், மாதந்தோறும் சதுர்த்தி விழாக்களும், தைப்பொங்கல், தைச் செவ்வாய், தைப்பூசம், சிவராத்திரி, பங்குனி உத்தரம், சித்திரைப் பரணி, சித்திரைக் கதை, ஆனி உத்தரம், ஆனி அவிட்டம், நவராத்திரி ஐப்பசிப் பரணி, கந்தசஷ்டி, கார்த்திகை விளக்கீடு, விநாயகர் விரதம், திருவெம்பாவை முதலான விழாக்களும் நடைபெற்று வருகின்றன.

இராணுவ நடவடிக்கை காரணமாக 1992 யூன் 11இல் யாவரும் இடம் பெயர்ந்து மீண்டு 1996 இல் வந்த போது கோயில் கதவு உடைக்கப்பட்டிருந்த போதும் சுவாமிக்கோ ஆலயத்துக்கோ சேதம் எதுவுமின்றி எம் பெருமான் இருந்தபடி இருந்த காட்சியும் அவர் திருவடிகளில் வைத்துச் சென்ற தங்க நகைகள் வைத்தபடி இருந்தமையும் "நம்பினார் கெடுவதில்லை" என்பதற்குச் சான்றாயின. காலத்தினாற் கழிக்கப்பட வேண்டிய தளபாட உபகரணங்கள் மட்டும் கழிந்தன.

மீண்டும் வழிபடுவோரின் இடையறா முயற்சியால் 1998 தைப் பூசம் தொடக்கம் பெருமானுக்குப் பூசை வழிபாடுகள் ஆரம்பமாயின. மகாகும்பாபிஷேகத் திருப்பணிகளை இளந்தலை முறையினர் முன்னெடுத்தனர்.

பரிவார மூர்த்தியான முருகனுக்குத் திரு. கு. சுந்தரலிங்கம் குடும்பமும் திரு. வெற்றிவேலு குடும்பமும் நேர்த்தி செய்து தொடக்கி வைத்த முருகன் கோயில் வேலைகள் 1999 சித்திரைப் பூரணை நன்னாளில் மீண்டும் தொடங்கப்பட்டுப் பொது நிதி உதவியும் கொண்டு நிறைவு செய்யப்பட்டது. விமானத்தில் ஆறுபடை வீட்டுச் சிற்பங்களும் திரு. மு. கதிரிப்பிள்ளை குடும்பத்தினரால் நிறைவு செய்யப்பட்டன.

ஏனைய திருப்பணி வேலைகள் (1999.05.03 இல்) பாலஸ்தாபனம் செய்யப்பட்டுத் தொடங்கின. ஆலயம் வசந்த மண்டபக் கொட்டகை அமைக்கப்பட்டது. மண்டபக்கூரை ஓடுகள் முழுமையாகக் கழுவிப் போடப்பட்டன. முழுமையாக வர்ணந்தீட்டிப் புதுப்பொலிவு பெற்றது. கருவறைத்தளம் செப்பனிடப்பட்டது. சிறுதிருத்த வேலைகள் முதலான அனைத்து வேலைகளும் பூர்த்தியாகின. மணிக்கோபுரத் தூபியில் விநாயகர், முருகன், நடராசர் விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டன.

முருகன் கோயில் விமான, சிற்ப, விக்கிரக வேலைகளை அராலிச் சிற்பமணி வை.சொக்கலிங்கம் அவர்கள் அற்புதமாகச் செய்தார். வர்ணந்தீட்டும் வேலைகளை "ஓவியச் செல்வர்கள்" சங்கானை ரங்கனும் முருகனும், அளவெட்டி திரு. அ. இராசசேகர் குழுவினர் அவர்களும் செய்துதவினர்.

எம்பெருமான் அநுக்கிரகத்தால் புனராவர்த்தன அஷ்டபந்தன பஞ்சகுண்ட பட்ச மகா கும்பாபிஷேகம் (1999.07.01) பிரமாதி வருடம் ஆனித்திருவோணத்தில் இனிதே நிகழ்ந்தது. இளவாலை சிவஸ்ரீ இராம. பாலச்சந்திரக் குருக்கள் தலைமை தாங்கி இதனை நடத்தி வைத்தார்.

"பாடுபட்டுத் தேடிய பொருள் அழியக் கூடும்; அப்பொருள் கொண்டு தேடிய அருள் அழியாது; ஆதலால் பொருளை அருளாக்கும் புண்ணியத் திருப்பணியே நம்பணி" எனும் உண்மையுணர்ந்த உள்நாட்டு, வெளிநாட்டு அன்பர்கள் குலதெய் வத்தின் கும்பாபிஷேகத்தை நிறைவாக்கி வைத்துப் புண்ணியப்பேறெய்தினர்.

பூசகர்கள்

ஆரம்பத்தில் ஆசார சீலர்களால் பூசை செய்யப்பட்டு, அதன்பின் பன்னாலைப் பரமய்யர் அவர்களாலும்பின் அவர்மகன் அருளானந்தையராலும், அவர் அகால மறைவடைய அவரின் அண்ணர் சிவானந்தையராலும் அதன் பின் அருளானந்தையர் மகன் சற்குணராச சர்மாவினாலும் பூசைகள் செய்யப்பட்டன. 1992 இடம் பெயர்வுடன் அவர் மீளவரா தொழிய 1998 தொடக்கம் மாவையாதீனம் து. குமாரசாமி சர்மா அவர்கள் பூசைகளைச் செய்து உதவுகின்றார்.

பாடல்கள்

எம் பெருமான்மீது முன்னோரால் திருவூஞ்சலும், இலக்கிய கலாநிதி பண்டிதர் மு.கந்தையா அவர்களாற் போற்றித் திருவகவலும், மட்டுவில் ஆ. நடராஜா அவர்களால் ஒல்லுடைப் பதிகமும் பண்டிதர் சி. அப்புத்துரை அவர்களால் மும் மணி மாலையும், சைவப் புலவர் சு.செல்லத்துரை அவர்களால் ஆனந்த மாலையும் பாடப்பட்டுள்ளன.

அமரர்கள்

செயற்கரிய திருப்பணித் தொண்டுகள் செய்து இன்று அமரர்களாகி விட்ட தலைவர் சைவ பூஷணம் சி. கார்த்திகேசு, பொருளாளர் பென்சனியர் க. இ. வேலுப்பிள்ளை, தொண்டன் செ. சந்திரசேகரம், வே. பாலசிங்கம், கு. சுந்தரலிங்கம், வே. சுப்பிரமணியம், திருமதி சு. கமலாம்பிகை என்போர் இவ்வாலய வரலாற்றில் பெருமானுடன் என்றும் நிலைத்திருப்பர்.

முன்னோர் வழிநின்று, பின்னால் வளர்ந்து வரும் இளம் தலைமுறையினர், குலதெய்வத்துக்குக் குறைவிலாது பணி செய்து நிறைவாழ்வு பெறுவாராகுக.

உ

சிவமயம்

### இளவாலை ஒல்லுடைப்பதி

# அருண்மிகு ஞானவைரவப் பெருமான்

## போற்றித் திருவகவல்

(அகராதிக் கிரமத்தமைந்தது)

இலக்கிய கலாநிதி - பண்டிதர் மு. கந்தையா, B. A.

அன்பமர் ஒல்லுடை ஐயா போற்றி
ஆபத் தகற்றும் அரசே போற்றி
இன்புறு நற்பதத் திறைவா போற்றி
ஈடில் சிவனருள் இறையே போற்றி
உம்பரும் போற்றும் உயர்பொருள் போற்றி

ஊரே றேறும் உத்தம போற்றி
எங்கள் துயர்தவிர் ஏந்தல் போற்றி
ஏழையர் அன்பினுக் கெளியாய் போற்றி
ஐதமர் செஞ்சடை அழகா போற்றி
ஒல்வதெல் லாமருள் ஒருவ போற்றி

ஓங்கா ரப்பொரு ளானாய் போற்றி
ஔவிய மிலாநெஞ் சகலாய் போற்றி
அஃகாப் பேரருள் அண்ணல் போற்றி
கபாலமேந் தொருகைக் கடவுள் போற்றி
கார்நிறக் கஞ்சுகத் தெந்தாய் போற்றி

கிண்கிணி யொலியொடு கிளர்வாய் போற்றி
கீழ்மைக ளகற்றுமெம் வாழ்முதல் போற்றி
குங்குமச் செந்நிறக் கோமள போற்றி
கூரிரு ளுலாவருங் குமர போற்றி
கெடுவார் கெடுமதி தவிர்ப்பாய் போற்றி

கேடில் பெருவளந் தருவாய் போற்றி
கைகொள் சூலக் கடவுள் போற்றி
கொடியர்நெஞ் சதிரநின் றிடிப்பாய் போற்றி
கோலா கலச்சிவ பாலா போற்றி
கௌவுதீப் பிணிநோய் களைவாய் போற்றி

சடைவிரி கோலம் உடையாய் போற்றி
சார்ந்தார்க் கிதமருள் தலைவா போற்றி
சிறுத்தொண்டர்க்கருள் சிவமே போற்றி
சீர்மிகு சிவக்கனற் பொறியே போற்றி
சுந்தரத் திருமுகத் தோன்றல் போற்றி

சூழிமால் யானை உரித்தாய் போற்றி
செவ்வல ரிப்பூந் தாராய் போற்றி
சேத்திர பாலனாஞ் சிவசுத போற்றி
சைவக்கொடி படர் தருவே போற்றி
சொக்கநல் லெழில்கொள் சோதி போற்றி

சோரர் பயந்தவிர் துணைவா போற்றி
சௌசன்ய வாழ்வருள் சாமி போற்றி
ஞமலிமீ மிசைக்கொள் நாயக போற்றி
ஞான வைரவ நாதா போற்றி

'டண்டண்' தமருக தாடி போற்றி
'டிண்டிண்' நடமிடு தாளாய் போற்றி
தயவுட னெமக்கருள் தாயே போற்றி
தாயாம் பார்வதி சேயே போற்றி
திசைமகிழ் காவற் சேவக போற்றி
தீமைகள் பொசுக்குஞ் சிவக்கனல் போற்றி

துட்டர் துடுக்கொழி சிட்ட போற்றி
தூயர் துயர் தவிர் நேய போற்றி
தெய்விக பயமருள் செம்மல் போற்றி
தேவரு மறியாச் செம்பொருள் போற்றி
தையலர் மருவாச் சாமி போற்றி

தொழுவார் அகத்துயர் துடைப்பாய் போற்றி
தோன்றாத் துணையே சுடரே போற்றி
நக்கனா யுலவிடுங் நம்பி போற்றி
நாகமெய்ப் பூணூல் நம்பா போற்றி
நித்தலும் வந்தாட் கொள்வாய் போற்றி

நீங்கா துளத்தமர் நிமலா போற்றி
நுங்கிநம் மகத்திருள் நொடிப்பாய் போற்றி
நூதன கதியருள் நாத போற்றி
நெளிசுருட் செஞ்சடை நின்மல போற்றி
நேயர்க் கிதமருள் நீதி போற்றி

நைபவர்க் குவகைகள் செய்வாய் போற்றி
நொந்தமு மெம்முன் வந்தருள் போற்றி
நோன்பிருந் துனையே நேர்ந்தனம் போற்றி
பரணி விழாமகிழ் பரனே போற்றி
பார்முழு தஞ்சும் பரமா போற்றி

பிரமன் சிரங்கொய் பெரியோய் போற்றி
பீடுயர் தோற்றப் பெருந்திரு போற்றி
புன்மைகள் நீக்கும் புண்ணிய போற்றி
பூதப் படையுடைப் புனிதா போற்றி
பெரியோ ரேத்தும் பெரியவ போற்றி

பேய்பிலி யோட்டும் பிரானே போற்றி
பையுடைப் பாம்பா பரணா போற்றி
பொய்தவிர்த் தாளும் புங்கவ போற்றி
போற்றியென் றணைவார்புகலே போற்றி
பௌவப் பிறப்பொழி பரனே போற்றி

மங்கல வாரம் மகிழ்வாய் போற்றி
மாதிரங் காத்தருள் மகிபா போற்றி
மின்னொளிர் முத்தலைச் சூல போற்றி
மீக்கிளர் செஞ்சுடர்ச் சோதி போற்றி
முன்னின் றீர்த்தருள் மோஹன போற்றி

மூவுல கினுக்குமோர் முதலே போற்றி
மெத்துநல் வடுக வித்தக போற்றி
மேவுயர் பிரம சாரி போற்றி
மைதளிர் மேக வடிவினை போற்றி
மொய்த்தொளிர் நீள்சடை மூர்த்தி போற்றி

மோக மயக்கொழி முன்னவ போற்றி
மௌவல் மாலை மார்பின போற்றி
யமபயந் துரக்கும் இயவுள் போற்றி
யாம்புரி பிழைபொறுத் தருள்வாய் போற்றி
யுகமுடி வினுமெமை யிகவாய் போற்றி

யூகமி லெமதுளச் சேகொழி போற்றி
யௌவனத் திருவொழிர் சைவ போற்றி
வக்கிரப் பல்லொளிர் வத்திர போற்றி
வாளர வரைஞாண் வடிவின போற்றி
விற்பொலி சூல கபால போற்றி

வீரபத் திரனுக் கிளையாய் போற்றி
வெற்றரைப் பிள்ளாய் விபுவே போற்றி
வேண்டிய வேண்டியாங் கீவாய் போற்றி
வைரவ படுக பைரவ போற்றி
'ஹ்ரீம்' மந் திரத்தினுட் கிளரொளி போற்றி

போற்றி போற்றிநின் பூங்கழல் போற்றி !

1987. 08. 28

உ

சிவமயம்

# இளவாலை ஒல்லுடை ஞானவயிரவப் பெருமானே குடமுழுக்காடியருள்வாய் (1. 7. 99)

-சைவப் புலவர் -

ஒல்லுடைப் பதிஞான வயிரவப் பெருமானே
உன்திருக் கோயில் புதுக்கிப்
பல்லோரும் தவவிரத நோன்பிருந் தேயுனது
பல திருப் பணிகள் செய்தோம்
நல்லோரை பிரமாதி ஆனியில் திருவோண
நன்னாளிற் குடமுழுக் காடிப்
பொல்லாத போருடன் பீடைகள் போக்கியே
புதுவாழ்வு அருளுவாயே.

உ

சிவமயம்

# அருண்மிகும் ஒல்லுடை ஞானவயிரவர்

# ஆனந்த மாலை

(ஆலயத்தை வலம் வந்து வழிபடும் ஒழுங்கில் ஆக்கப்பட்டது)

நித்திய பாராயணத்துக்குரியது

- சைவப் புலவர் சு. செல்லத்துரை -

ஒல்லுடை ஞான வயிரவரே
உங்கள் திருவடி தஞ்சமையா
நல்வழி காட்டி நம்வாழ்வில்
நாளுமே ஆனந்தம் தாருமையா. 1.

எல்லையில் லாத பரம்பொருளே
ஒல்லுடை யானென வந்தவரே
அல்லும் பகலும் நாம்தொழுதோம்
ஆனந்த வாழ்வு தாருமையா. 2.

சிதம்பர வெளியினில் நடம்பயிலும்
சிவபெரு மானே ஒல்லுடையில்
இதம்பெற வயிரவ ராயிருப்பீர்
எமக்கா னந்தம் தாருமையா. 3.

தூல லிங்க வடிவான
கோபுர வாயில் தரிசித்தோம்
ஞால முதல்வா வயிரவரே
நமக்கா னந்தம் தாருமையா. 4.

ஓமெனும் நாத வடிவான
ஒலிதரும் மணிக்கோ புரம் தொழுதோம்
நாவிலுன் நாமம் நாம் மறவோம்
நல்லா னந்தம் தாருமையா. 5.

பத்திர லிங்க உருவான
பலிபீ டத்தில் பாவமெல்லாம்
இத்தின மேநாம் பலியிட்டோம்
எமக்கா னந்தம் தாருமையா. 6.

சித்தம் சிவன்பால் வைத்திருக்கும்
சுத்தான் மாவாம் நந்தியென
இத்தரை மீதில் இன்புறவே
இனியா னந்தம் தாருமையா. 7.

நால்வே தத்தூண் நடுவினிலே
நல்லன் னங்கள் மேடை யுடன்
மாமண் டபமுறை வயிரவரே
மகிழ்வானந்தம் தாருமையா. 8.

தேன் பொழில் ஒல்லுடைப் பதியினிலே
ஞான விநாயக னாயிருக்கும்
தான்நிகர் இல்லாத் தனிப்பொருளே
தந்தருள் வீர்எமக் கானந்தமே. 9.

ஞானவி நாயகர் தூபியிலே
மோனமா யேயுப தேசமருள்
ஞானமே தட்சணா மூர்த்தியருள்
ஞானா னந்தம் தாருமையா. 10.

திருவளர் ஒல்லுடைப் பதியினிலே
அறுபடை வீடமர் முருகோனே
பெருவிறல் வேலுடைப் பெருமானே
பேரா னந்தம் தாருமையா. 11.

மாமண் டபத்தின் தூபியிலே
வாசக் கமலப் பூவிலுறை
தேவே திருவே கலைமகளே
திவ்யா னந்தம் தந்தருள்வீர். 12.

அழகிய வசந்த மண்டபத்தில்
அதியுல் லாச கோலமுடன்
உளமகிழ் கொலுவுறை வயிரவரே
உயரா னந்தம் தாருமையா. 13.

நந்தமர் ஒல்லுடை வந்தமரும்
நாதா நாக தம்பிரானே
சந்ததி வந்து தழைத்திடவே
சந்ததம் ஆனந்தம் தாருமையா. 14.

நாக நாதன் தூபியிலே
நடமிடும் நர்த்தன நாரணனே
நம்மவர் குலத்தைக் காத்தென்றும்
நமக்கா னந்தம் தாருமையா. 15.

சித்திரை ஐப்பசிப் பரணியிலும்
செவ்வாய் வெள்ளிக் கிழமையிலும்
நித்திய விரத நோன்பிருந்தோம்
நீடா னந்தம் தாருமையா. 16.

அருள் நிறை ஒல்லுடை வீதியிலே
அடியழித் தோமுன தருள்குளித்தோம்
மருள் அழிப் பாய்மன மயக்கறுப்பாய்
மாண்புயர் ஆனந்தம் தாருமையா. 17.

பற்பல கடவுளர் வடிவினிலே
பாருளர் பக்குவ நிலைக்கேற்ற
அற்புத வடிவாய் வருமிறைவா
ஆனந்தம் தந்தெமை ஆளுமையா. 18.

பல்லுயிர்க் குயிராம் பரம் பொருளே
ஒல்லுடைப் பதியினில் உறைபவரே
தொல்லை துயர்மிடி தீர்த்தெமக்கு
எல்லையில் ஆனந்தம் தாருமையா. 19.

அன்பு மனமலர் கொண்டுனக்கு
ஆனந்த மாலை சூட்டுகிறோம்
ஆனந்த ஞான வயிரவரே
ஆனந்த வாழ்வு அருள்வீரே. 20.

## நினைவிற் கொள்வதற்கு

| | | | |
|---|---|---|---|
| ஆவணி | 01 – 18.08.99 | புதன் | மாதப் பிறப்பு |
| | 03 – 19.08.99 | வெள்ளி | வரலக்ஷமி விரதம் |
| | 05 – 22.08.99 | ஞாயிறு | ஆவணி மூலம், ஏகாதசி விரதம், ஆவணி ஞாயிறு, குங்கிலியக்கலயர் குருபூசை |
| | 07 – 24.08.99 | செவ்வாய் | பிரதோஷ விரதம் |
| | 08 – 25.08.99 | புதன் | நடேசரபிஷேகம், ஆவணி ஓணம், இருக்கு வேத உபாகருமம் |
| | 09 – 26.08.99 | வியாழன் | பூரணை விரதம், யஜுர் வேத உபாகருமம் |
| | 12 – 29.08.99 | ஞாயிறு | ஆவணி ஞாயிறு |
| | 13 – 30.08.99 | திங்கள் | சங்கட ஹர சதுர்த்தி விரதம் |
| | 16 – 02.09.99 | வியாழன் | கார்த்திகை விரதம், ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி |
| | 19 – 05.09.99 | ஞாயிறு | ஆவணி ஞாயிறு |
| | 20 – 06.09.99 | திங்கள் | ஏகாதசி விரதம் |
| | 21 – 07.09.99 | செவ்வாய் | பிரதோஷ விரதம், செருத்துணையர் குருபூசை, |
| | 22 – 08.09.99 | புதன் | புகழ்த்துணையர் குருபூசை, அதிபத்தர் குருபூசை |
| | 23 – 09.09.99 | வியாழன் | அமாவாசை விரதம், இளையான் குடிமாறர் குருபூசை |
| | 26 – 12.09.99 | ஞாயிறு | ஸாமவேத உபாகருமம், ஆவணி ஞாயிறு |
| | 27 – 13.09.99 | திங்கள் | விநாயக சதுர்த்தி விரதம் |
| | 28 – 14.09.99 | செவ்வாய் | ரிஷிபஞ்சமி |
| | 29 – 15.09.99 | புதன் | ஷஷ்டி விரதம் |
| | 31 – 17.09.99 | வெள்ளி | ஷடசீதி புண்ணிய காலம் இரவு 8.12 முதல் 2.36 வரை |

# ஒல்லுடைப் பதிகம்

மட்டுவில் ஆ. நடராசா

### காப்பு

நல்வினையால் நம்முடைய வல்வினையை நீக்கவென
ஒல்லுடைக்கு வந்த வயிரவரை - நான்பாட
ஒல்லுடையான் அண்ணன் கணபதியே யுன்னுடைய
நல்லருளை நாடினேன் தா.

### பதிகம்

மலரவன் வேதியன் வேதம் உணர்ந்தோன்
மாலாகித் தான் பிரமமெனத் தருக்கி
சலமிலாச் சங்கரனைத் தன் வாயால்
சினந்திகழ விகழ்ந் துரைத்த போது
சலந்தரன் தன்தலை பிளந்தவன் அருளால்
சிந்தையிற் றோற்றிய வயிரவ மூர்த்தி
நலமிலாச் சிறியரேம் புன்மை தீர்க்க
ஓவா தொல்லுடை யிருந்தருள்வாய் போற்றி 1.

திருமேனி தன்வண்ணம் நீல வண்ணம்
திகழுமிரு பிறைபோல் வக்கிர தந்தம்
திருவிழி மூன்று, சினங்கிளர் சிரிப்பு
திரிசூல மேந்து கரமொன்று, மழுத்
தரித்த கரமொன்று, பாசந் தாங்கு
கரமொன்று, ஓர் கரத்தில் உடுக்கையேந்தி
கருதுவார் கருத்தினை முடிக்க வேண்டி
ஓவா தொல்லுடை யிருந்தருள்வாய் போற்றி 2.

எண்ணிலர் பிரமர் இறந்து போனார்
எத்தனையோ அரிகள் அழிந்தார், அன்னார்
மண்டையி னோடு கோத்த மாலை
மாலைச் செவ்வானம் போற்சிவந்த கேசம்
கண்ணிற் றீப்பொறி பறக்கும் பாம்பு
கட்டு மரைஞாணாய் அரையைச் சுற்றும்
கண்டவர் அஞ்சினும் கருணை யுள்ளாய்
ஓவா தொல்லுடை யிருந்தருள்வாய் போற்றி 3.

காலிற் சிலம்பு கலீர் கலீரென்ன
கோபக் குணங்கொண்டு நின்றிடு முன்னை
ஆலம் துண்டவன் அன்புடன் நோக்கி
அயனுற்ற மாலினை யவன்தலை கிள்ளி
சாலவும் நீக்கிய பின்னுயிர் கொடுத்து
சீலநன்குடையோர், முனிவர், தேவர்
மாலினை நீக்கி யருளென, அருளி
ஓவா தொல்லுடை யிருந்தருள்வாய் போற்றி 4.

அயன் சிவனை யிகழ்ந்தவாய் கொண்டதலை
அக்கணமே யுன்நகத்தாற் கிள்ளி, அயன்
மெய்யிற் குருதி வெள்ளம் பாய்ந்து
மேரு கிரியைச் சூழ, விழித்து நோக்கிக்
காய்ச்சி, போனவுயிர் மீளளிக்கக்
கசிந்துருகி, அறுந்த தலையேந்து மாறு
அயன்வேண்ட, அவன் கபால மேந்தி
ஓவா தொல்லுடையிருந் தருள்வாய் போற்றி. 5.

காலவேகன் கனன்முக னாதியாம்
கணித மற்றதோர் சாரதர் சேனையை
நீலமேனிகொள் நிமல நீயுதவி
நெறிபிறழ்ந்த முனிவர் தஞ்சாலைகள்
சீல நற்றவமிலா உம்பர் நாடு
சீதரன் வைகுந்த மடைந்து, பலியேற்று
வாலுணர்வூட்டி உன் புவன முற்றாய்
ஓவா தொல்லுடை யிருந்தருள்வாய் போற்றி 6.

சிவபிரா னடியார்க் கிடுக்கண் செய்த
சீற்றமிகு மதகளிற்றைத் தோலுரித்து
சிவந்த திருமேனி நிறந் தோன்றாவண்ணம்
சேவடியும் முடியும் மறையப் போர்த்து
எவ்வண்ணமோ வுன்வண்ண மாமென்(று)
எவரு மறிதற்கரிய வண்ண மாகி
சிவநெறியார்க் குய்வண்ணங் காட்ட
ஓவா தொல்லுடையிருந் தருள்வாய் போற்றி 7.

அரியன்று நரசிங்கமாய் தோன்றி
அகந்தை கொண்ட இரணியனைக் கொன்று
பெரியோன் தானெனத் தருக்கி நிற்க
பேரருளால் மால்கொண்ட மாலகற்றி
அரியவுணர் வூட்ட, அவன் உரியை
(உரித்து) உதர பந்தனமா(ய்) அணிந்தவனே!
அரியானே! அடியார்க்(கு) எளியானே!
ஓவா தொல்லுடையிருந் தருள்வாய் போற்றி. 8.

நன்னீரும் மரநிழலும் உயிர்க்கு
நலஞ்செய்யும் என்பதாலோ? சங்கரனார்
தன்மைந்தா! நீ யங்கே யலகை
அணுகாமே ஆணையிட்டுக் காப்பாய்
தன்னை யடைந்தோரைத் தான்காத்தல்
தலைவர் கடனாம் ஆதலினால், உம்மை
அன்பாற் பிணித்து, அருள் வேண்டுவோமை
ஓவா தொல்லுடையிருந் தருள்வாய் போற்றி 9.

ஆய பரம்பொருள் நீயே யாகும்
அரிய மறைப் பொருளும் நீயேயாகும்
தூய தொண்டருளம் மரம் சுடலை
தூபியுடை யாலய(ம்) உன் கோயிலாகும்
மாயையி னுலகெலா மிறுதியாகும்
மயானத் தெல்லையில் நால் வேதமெனும்
நாயினை யுயர்த்துமெம் நாயகனே!
ஓவா தொல்லுடையிருந் தருள்வாய் போற்றி. 10.

(இப்பதிகம் இளவாலை - வைரவேஸ்வரம் ஒல்லுடை ஞானவயிரவ சுவாமியின் பேரில் பாடப்பட்டது)

1990. 06. 06

உ
சிவமயம்

யாழ். இளவாலை

# அருள்மிகு ஒல்லுடை ஞான வயிரவர்

# மும்மணி மாலை

- பண்டிதர் சி. அப்புத்துரை -

### காப்பு

#### நேரிசை வெண்பா

பூமலியும் ஒல்லுடையிற் புக்கொளிரும் வைரவர்தம்
தூமலராம் பாதத்தைத் தோத்திரஞ்செய் – பாமலராம்
மும்மணி மாலையினை முட்டின்றிச் சூட்டுதற்குக்
கைம்மா முகத்திறையே காப்பு.

### நூல்

#### கட்டளைக் கலித்துறை

1. வாய்த்த பிறவி வளம்பெற ஒல்லுடை வாழ்முதலைப்
போய்த்தொழு தேதினம் போற்று முயர்வாம் புகலடைந்தோம்
பேய்த்தேர் எனவோர் பிழைபடு தோற்றம் பிழைப்பித்தெமைச்
சேய்த்தாம் நிலைதவிர்த் தெந்தை அடிச்சிந்தை சேர்க்குவமே.

#### அகவல்

2 சேர்ந்தனஞ் சிவனுடைச் செய்ய திருவடி
ஆர்ந்தனம் வயிரவ ராய வடிவினில்
சிவனவன் சிந்தையிற் றெளிந்த உருவமே
அவனியில் அகந்தையை அழிக்க வந்தது
ஒல்லுடை உவந்துறை ஒருவனு மவ்வழி
தில்லையுட் டிருவெனத் தோர்ந்துநின் றனமே.

#### நேரிசை வெண்பா

3. தேர்ந்தோஞ் சிவன்சிந்தைத் தேற லெனவந்து
சோர்ந்தொல் லுடைப்பதியின் செல்வமென்றாய்ச் – சார்ந்துறையும்
மக்கள் சிவவாழ்வை மாந்த அரவணைத்தாய்
எக்காலும் நீங்கோ மினி.

#### கட்டளைக் கலித்துறை

4. இனியவ னாயெமக் கின்னரு ளாயெங்க ளீசனென்றாய்த்
தனிமுத லாய்ச்சடை தாங்கிய கங்கை தரித்தவனாய்ப்
பனிமலை யாய்மதி பாம்பணி யாய்பரை பங்கினனாய்ப்
புனிதனென் றொல்லுடை போயுறை வைரவ போற்றினமே.

#### அகவல்

5. போற்றித் திருவடி புனைந்து புகழ்மொழி
ஏத்தி வயிரவ ராய சிவத்தினை
ஒல்லுடை உறைந்து உவப்பன செய்யும்
தில்லையுள் முதல்வனைச் சிவபெரு மானை
நினைந்து தொழுதோம் நீக்கமற் றுடனாய்
அனைத்து நிகழ்விலும் அணைத்தரு ளுவையே.

#### நேரிசை வெண்பா

6. அருள்பிரமற் காக்க அவன்தலையைக் கிள்ளிப்
பொருள்பொதிந்த செய்ய வழிப் போக்கி – இருள் கடிந்தாய்
செல்வவைர வப்பெரும சேவடியாம் பேறடைய
ஒல்லும் வகைபணிப்பாய் ஓர்ந்து.

#### கட்டளைக் கலித்துறை

7. ஓர்ந்துநீ ஒல்லுடை ஒண்பதி ஒன்றி உறைந்தெமது
தேர்ந்த திருவெனத் தெள்ளிய சிந்தையின் செல்வமெனத்
தீர்ந்த வுருவின நாம்சிவ மென்னும் வயிரவரே
சார்ந்தனம் எங்கள் தனிப் பெருந் தேவைத் தளர்விலையே.

#### அகவல்

8. தளர்ந்த அறிவினன் தாழ்ந்த உணர்வினன்
வளர்ந்த காழ்ப்புணர் வாம்வளக் கயமுகன்
உரங்கெடுத் துருவழித் துவந்து தோலுரித்
திரங்கு மாறுமேற் போர்த்துக் காட்டிய
ஒல்லு டைப்பதி உறையும் வைரவர்
அல்லல்தீர் சிவனென அறிந்து கொண் டனமே.

#### நேரிசை வெண்பா

9. கொண்டதொரு கொள்கை குலவும் வயிரவர்தான்
கண்டவுரு சங்கரனே கண்டுகொண்டோம் – பண்டையுள
சாத்திரங்கள் கூறுவதென் சம்புவுளத் தானவனாய்க்
காத்தளிக்கக் காதலித்தான் காண்.

## கட்டளைக் கலித்துறை

10. காண்பாம் நரசிம்ம மாம்மால் மயங்கிக் கறுத்தநிலை
வீண்பழி யோடு விளங்கு புகழை விலக்கியதே
மாண்புடைச் சங்கரன் மாலயன் காணா மலரடி யோன்
காண்டற் கரியன் வயிரவ ராகிக் கனன்றனனே.

## அகவல்

11. கனன்று மாலுரி கண்டுநீள் சட்டையாய்ச்
சினந்து போட்டவெம் சித்தன் சிவத்தொடு
சட்டைநா தப்பெயர் தாங்கியும் நின்றனர்
தொட்ட வைரவர் சோதி சிவனுடை
தெள்ளு சிந்தைத் தெளிந்த தோற்றமென்
றுள்ளி உவந்திங் கோர்ந்து மகிழ்வமே..

## நேரிசை வெண்பா

12. மகிழ்ந்தோம் திருவிழா மாட்சிபெலாங் கண்டு
நெகிழ்ந்துள்ளத் தேநினைந்து நின்றோம் – புகுந்தெமது
உள்ளப் பெருங்கோயி லுறையுத்த மன்கருணை
வெள்ளத்தி லேதிழைத்தோம் வேண்டி.

## கட்டளைக் கலித்துறை

13. வேண்டி யணைந்து விளைவறிந் தெங்கள் விருப்பறிந்து
தூண்டி யுளத்தினைத் தூயதா மாறு தொடரவைத்து
ஆண்டியு மையனு மன்புட னொன்றி அகமகிழ
ஈண்டிய வொல்லுடை ஏழைபங் காளனை ஏத்தினமே.

## அகவல்

14. ஏத்தி இறைஞ்சுமெம் ஆனை முகத்தானை
தோத்தி ரத்தேவாந் தூயன்தன் மூர்த்தமாய்
சாத்தி ரங்கள் சொலும்வழிக் கண்டனம்
ஒல்லு டைப்பதி உறையும் வயிரவர்
தில்லை முதல்வன் தேர்ந்த உருவமாய்
அல்ல லாயின அகலநின் றனரே.

## நேரிசை வெண்பா

15. நின்னடிக ளிற்பணிந்தோம் நீள நினைந்துனது
பொன்னென் புகழ்பாடிப் போற்றி செய்தோம் – முன்னாக
ஒல்லுடைவா முத்தமனை ஓர்ந்தோகு சிவமென்றே
யெல்லையிலா இன்பார்ந்த னம்.

## கட்டளைக் கலித்துறை

16. இன்று துணிந்தெம தின்னல் தவிர்த்திட ஏய்ந்தவழி
ஒன்றெம தொல்லுடை ஓர்ந்துறை ஐயனை உள்ளமதில்
நன்றெனக் கண்டு நாம் நாளும் வழுத்துவம் நாவினடம்
துன்றும் படியாகத் தோத்திரம் பாடித் துதிக்குவமே.

## அகவல்

17. துதித்துப் பிறவித் தொடக்கறுத் துவப்ப
விதித்த விதியை வேறா யமைக்க
சிவனவ னுளத்துத் தோன்றிய வுருவாய்த்
தவத்திரு வாகிய தனிப்பெருந் தேவை
மதித்தெ மொல்லுடை மருவிய இறையைப்
பதித்தெ முளத்திற் பரவிவேண் டுவமே.

## நேரிசை வெண்பா

18. பரவிப் பணிந்தெம் பவநோ யகற்ற
இரவலரா யொல்லுடையி னேங்கிப் – புரமெரிசெய்
புண்ணியனைப் போற்றிசைத்துப் போதொடுநீர்ப் பூசைசெய்தோம்
எண்ணநிறைத் தீடேற்று வாய்.

## கட்டளைக் கலித்துறை

19. வாய்த்த பிறவி வளமார்ந் தொளிர வழமையதாய்ப்
போய்த்தொழும் ஒல்லுடைப் பூம்பதிக் கோயில் புகுந்தவனே
தாய்த்திரு வான தமிழ்திரு வேதையல் பங்கினனே
சேய்த்தாம் நிலைதவிர்த் தென்னையு முன்னுடன் சேர்த்தருளே.

## அகவல்

20. அருளுவை அரவணைத் தனுதினம் வேண்டினம்
இருள்கடிந் தெம்முடை இழிநிலை போக்குவை
கயமுகன் உரியினைக் கவர்ந்தனை ஆண்டனை
பயமிலை நயந்தனம் பணிவொடு வணங்கினம்
வருமிடர் தீர்க்குவை வளமிகும் ஒல்லுடை
ஒருவனே ஏத்தினம் உவப்பொடேற் குவையே.

## நேரிசை வெண்பா

21. உவப்புடனே யேற்பாய் உணர்வழிந்து நின்றோம்
பவக்கடலைப் போக்கிடநாம் பார்த்தோம் – அவப்பெயர்கள்
வந்தணையு முன்பாக வாரியணைத் தொல்லுடையாய்
தந்தருள்வாய் உன்னடிகள் தான்.

## கட்டளைக் கலித்துறை

22. தானே வயிரவர் தாமென வந்த தகவுடையார்
மானோர் கையினர் மழுவுட னாயவர் ஒல்லுடையார்
வானோர்க் கரியர் மகவுக் கறியை வரித்தவராய்த்
தேனாய் மொழி சிறுத்தொண்டர் தருமமு தேற்றனரே.

அகவல்

23. அமுத மாயெமக் கானந்தந் தந்தவர்
சுமுக மாகவெம் துன்பந் துடைத்தவர்
ஒல்லு டைப்பதி உவந்த ஒருவனாய்த்
தில்லை யில்நட மாடுஞ் சிவத்தினை
ஐயனை அண்டத் தப்பாலு மானானை
பைய வேயணைந் தின்பம் நுகர்வனே.

நேரிசை வெண்பா

24. நுகர்ச்சிப் பொருளுணர்வை நுண்ணிதினி லோர்ந்து
சுகத்துக் குரியவரென் றெண்ணும் – இகத்திலுயர்
ஒல்லுடையின் வாழ்முதலை ஓர்ந்தெமராம் என்றாய்ந்து
தொல்லை தவிர்த் தின்புளரா வோம்.

கட்டளைக் கலித்துறை

25. இன்பந் தருபவன் னெம்முட னாயவன் இப்பிறவித்
துன்ப மென் றாய துனிப்பொருள் நீக்கியங் கொல்லுடையில்
அன்புக் கொருவன் அனைத்துமாய் நிற்பவன் அண்டினர்க்கோ
என்று மினியவன் ஏற்ற மளிப்பவன் எம்மிறையே.

அகவல்

26. ஏற்ற மளித்தெம தினிய வாழ்வினும்
கூற்று வன்வந்து குலவும் போதிலும்
சார்ந்து தண்ணளி தருவதை வேண்டி
ஆர்ந்தொல் லுடையுறை ஐயனை வணங்கினம்
பண்டு நிறைந்த பழவினை போக
மண்டிடு மகிழ்வாம் மாண்பு பெறுவமே.

நேரிசை வெண்பா

27. பெறுதற் கரிதென்னும் பேறாம் மனிதப்
பிறவிபெற்ற வாய்ப்பினையாம் பேணி – மறலிவரு
முன்பாக ஒல்லுடையின் முன்னவனை வந்தித்தோம்
இன்பவாழ் வினிதாக வே.

கட்டளைக் கலித்துறை

28. வேண்டுவ தென்னவென் றேயறி யாத வெறுவிலியை
ஆண்டுகொ ளென்ப தறமுடைத் தன்றெனப தாரறிவார்
ஈண்டைய எம்நிலை இவ்வகைத் தாமெனில் ஏற்றபடி
தூண்டியங் கொல்லுடைத் தூயன்தன் பாதம் தொழுகுவமே.

அகவல்

29. தொழுது நின்றவர் துன்பந் துறந்தனர்
எழுபி றப்பினு மின்ப மடைகுவர்
ஒளிரு மொல்லுடை யொண் பொருள் உவந்தவர்
துளியுந் துன்பத் தொடக்கில ராயினர்
வயிரவ ராய்வரு வாலறி வன்பதம்
உயிர்க்குயி ராமென்று ணர்ந்து போற் றுவமே.

நேரிசை வெண்பா

30. போற்றிசைத்து நாளும் பூநீராற் பூசை செய்து
காற்றுள தாம் போதினிலே காரியினை – ஏற்றருள
வேண்டிநின் றொல்லுடையில் வேதனைதீர்ந் தொன்றி நின்றோம்
மாண்பா யருள்புரிகு வாய்

உ

## இளவாலை ஆனைவிழுந்தான் விக்கினேஸ்வரா குடமுழுக்காடியருள்வாய் (25.6.99)

- சைவப் புலவர் -

இளவாலை வடபாலில் எழிலான இடமான அரசுநீழல்
எமையாளச் சுயமாக உருவான கணநாதனே
உளமார உனைநாடி வருமார்தப் புரவீக வல்லியானை
உனதாளில் புகவீழ்ந்து மிகுமாவ லாய்த்துதிக்க
அழகான அருளானை விழுந்தானெ னப்பெயர்கொள் பதியின் வாழ்வே
அமுதான கலைஞானம் அருள்விக்ன விநாயகாநீ
வளமான குடமுழுக் காடியே பெருஞ்சாந்தி கண்டுவந்து
வற்றாத பேரின்ப வழிகாட்டி அருளுவாயே.

உ
சிவமயம்

# அருள்மிகு ஒல்லுடை ஞானவயிரவர் கோயில் பரிபாலன சபையினர் - 1999

| | | |
|---|---|---|
| *தலைவர்* | - | திரு. க. இராசேந்திரம் |
| *செயலாளர்* | - | திரு. சு. சுதர்ஜன் |
| *பொருளாளர்* | - | திருமதி கி. சுகந்தா |
| *உப தலைவர்* | - | திரு. செ. காத்திஸ்வரன் |
| *உப செயலாளர்* | - | திரு. சி. சுப்பிரமணியம் |
| *போஷகர்* | - | சைவப் புலவர் சு. செல்லத்துரை |

## செயற்குழு உறுப்பினர்கள்

திரு. க. கிருபானந்தராசா
திருமதி செ. சிவகாமசுந்தரி
திரு. வ. திருநாவுக்கரசு
திரு. ச. சிவநாதன்
செல்வன் சு. சிஷோக்குமார்
செல்வன் செ. மாவிரதன்
செல்வன் பா. குலதாசன்

## மகா கும்பாபிஷேக திருப்பணி உபகுழுவினர்

திருமதி ஆ. சரஸ்வதி
செல்வி இ. இசைச்செல்வி
செல்வி பா. பிரபாசினி
திரு. க. தம்பு
திரு. சி. பாலச்சந்திரன்
திரு. சரவணமுத்து
திரு. த. கருணாகரன்
திரு. ஆறுமுகம்
செல்வன் செ. ஈஸ்வரன்
செல்வன் பே. லவக்குமார்
செல்வன் இ. தினேஸ்
செல்வன் நா. அனந்தன்
செல்வன் சு. சுதாகரன்

# வைரவ வழிபாடு

மஹாமஹோ உபாத்தியாய
இலக்கிய கலாநிதி பண்டிதர் மு. கந்தையா, B. A.

நம்மவர்களிடையே பாரம்பரியமாகவுள்ள வழிபடு தெய்வங்களினியல்புகளையும் அவற்றின் சார்பில் அமையும் வழிபாட்டியல்களையும் கட்டுத்திட்டமான ஒரு ஒழுங்கமைப்பின் கீழ்க் கொண்டு கூறுவது கஷ்டசாத்தியம். காற்றுக்கு வீடு கட்டிக் குடியமர்த்துவது போல்வதோர் அசாத்தியம் அது வெனிலும் மிகையாகாது. சிவாகமங்களும் அந்த நிலையையே பிரதி பலிக்கின்றன. ஒன்றுபோல் இருபத்தெட்டுச் சிவாகமங்களும் அவற்றுக்கு 227 உபாகமங்களும் இருந்தும் அவை பிரதி பலிப்பதைவிடத் தெளிவாகப் பிரதிபலிக்க வென்றெழுந்த பிரதான பத்ததிகள் பதினெட்டுக்கும் மேல் இருந்தும் ஆசங்கைக்குரிய விடயங்களுக்கு நேர் நிறுத்திச் சுட்டி இதுதான் என்று சொல்லிவிட முடியாத எத்தனையோ பிரச்சினைகள், தெய்வமூர்த்த அமைப்பு, பிரதிஷ்டை, கும்பாபிஷேகம், வழிபாட்டு முறை சம்பந்தமாக இருந்து கொண்டேயிருக்கின்றன. அவர் அப்பிடிச் சொல்கிறார், இவர் இப்படிச் சொல்கிறார் என்ற நிலையின்றிப் பலர் ஒரே மாதிரிச் சொல்லும் நிலை பெரும் பாலும் இல்லை. இதனால் அவரவர், அவரவர் குரு சொல்லுகிறபடி செய்யலாம் என்ற ஒரு புறநடை விதியும் அவசியம் வேண்டப்படும் போலிருப்பது கண்கூடு. ஆனால் இதற்குள்ளே ஒளிர்கின்ற சைவ மஹத்துவ உண்மை ஒன்றைக் கிரகிக்குமளவில் நாம் திருப்தியுற்றேயாக வேண்டும். அது யாதெனில், ரிஷித்துவம் முனித்துவம் பெற்ற ஆதியுயர் மஹான்களின் யுக்தி தரிசனங்களுக்குக் கூட அடங்க வராது அப்பாலும் போய்க் கொண்டிருக்கும் ஒரு அகண்ட வியாபகத் தன்மை சைவத்துக் குண்டு என்பதே அதுவாகும். சைவம் ஒருவராற் செய்யப்பட்டதல்ல என்ற கருத்தும் அதிலேயே லயங்கொண்டிருத்தலும் அறியத்தகும்.

நமது சூழலிலே உள்ள வைரவக் கடவுள் வழிபாடு என்ற விஷயம் தனியான ஒரு பிரச்சினை. சாதாரணமான ஒரு மரத்தின் கீழ் சூல வடிவில் இருப்பதுடன் சகல பரிவாரக் கோயில்களுக்கும் மத்தியிற் கர்ப்பக்கிருக மூர்த்தியாக வைரவர் விளங்குதல்வரை வைரவ தலங்கள் பலவேறு நிலைகளில் உள்ளன. குறிப்பிட்ட சில தினங்களில் மட்டும் விளக்கேற்றும் நிலை முதல் நித்திய நைமித்திய நெறியில் பிரமோற்வசம் நடத்தும் நிலையீறாக வைரவர் வழிபாடு நடைபெற்று வருகிறது. வைரவர் கிராமத் தெய்வம், காவற்றெய்வம், ரத்த பலியேற்குந் தெய்வம் என்பன போன்ற கருது நிலைகளும் ஒருபுறம். அவர் சிவகுமாரர் நால்வரில் ஒருவர். ஆதலால் சாக்ஷாத் சிவபெருமானே அவர் என்ற கருத்தும் ஒருபுறம். சைவத் தெய்வ மூர்த்தங்களில் மற்றுஞ் சிலவற்றின் சார்பில் (துர்க்கை, காளி) இப்படியான மாறுபாடுகள் இருப்பதுண்டேனும் வைரவர் விஷயத்தில் இது மிகமிகப் பரவலாய் இருப்பதால் அதுபற்றி அநேகர் கூடுதலான விசாரங் கொள்வது இயல்பே.

## சிவன் - சிவகுமாரர்

சிவனுக்கென்ன கல்யாணம்? சிவனுக் கென்ன பத்தினி? என்பது போலச் சிவனுக்கென்ன குமாரர்? எனச் சொல்லி அலுத்துக் கொள்ளும் நிலையுண்டு. காணாக் கடவுளை கற்பிதப் பொருளாகக் காண்பதாகக் கனவு கண்டு கொண்டிருக்கும் மனிதன், தனது வாழ்க்கைச் சூழல் அமைதியைக் கடவுளிலும் ஏற்றிக் கொண்டிருக்கிறான் என்ற விவேக நிலையும் உண்டு. மனித விவேக மட்டத்துக்குக் கட்டுப்பட்ட ஒன்றே சைவம் என்ற கருது நிலைக்கு உடன்பட்டுள்ளவர்கள் மட்டுந்தான் இவற்றில் தக்கிக் கொண்டிருக்க முடியும். தத்தம் சமயத்துக்குரிய ஸ்தாபிதமான சாஸ்திர உண்மைகளை ஏற்றுக் கொள்ளாத எச்சமயத்தவரும் உண்மையநுபூதியை அடைய முடியாது என்ற கருமத்துக்குக் கட்டுப்பட்டவர்கள் இவற்றில் தக்கிவிட முடியாது. இக்கருத்து இன்றைய மேலைநாட்டு மறைஞான (Myslicism) ஆராய்ச்சியாளரி டமிருந்தும் வெளி வருதல் கருதத்தகும். ஐங்கரர், ஆறுமுகர் முதலாய மூர்த்தங்களெல்லாம் இருப்ப துண்மை என்பது சிவாகமங்களாலும் தமிழாகமமாகிய திருமந்திர த்தாலும் பிரஸ்தாபிக்கப்பட்ட ஒன்று. சிவாகம

சுலோகமொன்றில் வ, ஷ, ஸ தலயுக்தே சம்யக் ஆதாரயுக்தே தருணம் அருணகாத்ரம் வாரணாஸ்யம் கணேசம்............ என மூலாதாரத்து நாலிதழ் தாமரையில் வ, ஷ, ஸ என்ற அக்ஷரங்களுக்கு நடுவில் ஆனை முகத்தோடு விநாயகர் இருத்தல் அறியப்படுகிறது. திருமந்திரமும் ஔவையார் விநாயகர் அகவலும் அதற்கு அத்தாட்சியாகின்றன. சிவாலயங்களிற் கொடிமர பீடத்தின் அடியில் குகை வடிவச் சிறு கோயிலுளிருக்கும் விநாயகர் அதை நிதர்சனமாக்கிக் கொண்டிருக்கிறார். (கொடி மரம் – முள்ளந்தண்டு – விநாயகர் குகை – மூலாதாரம்) ஆறுமுகர் தோற்றமும் அவ்வாறே சிவாகமம், தமிழாகமம் இரண்டிலுமுள்ளன.

தமிழாகமம் இதனைக் குண்டலியோக நெறியில் வைத்துணர்த்துதல் வலுமிக்க ஆதாரமாகும். தமிழாகமமான திருமந்திரத்தில் 4ஆம் தந்திரத்தில் நவகுண்டம் என்ற பகுதியில் 12ஆம் மந்திரம் கவனிக்கத்தகும். நவகுண்டம் என்பது சிவயாகத்தில் மூலாக்கினியாகிய குண்டலினி எழுந்து மேல் நோக்கி நிற்கையில் அதன்கண் ஒன்பது குண்டங்கள் தோன்றி அவ்வவற்றில் சிவப்பிரபாவந் தோன்றக் காணும் ஒரு சாதனை. குறித்த மந்திரத்தில் சிவன் முன் ஆறு பொறி தோன்றி அதிற் கந்தன் சுவாமி காட்சிப்படுமாறு பேசப்படுகிறது. அதன் இறுதியடிகள்–

*கந்தன் சுவாமி கலந்தங் கிருத்தலால்*
*மைந்தன் இவனென்று மாட்டிக் கொள்ளீரே"*

என்று வெளிப்படையாகவே கந்தன் சிவன் மைந்தன் ஆமாற்றைக் குறிப்பிட்டுள்ளன. இம்மந்திரத்துக்கு அடுத்த முன் மந்திரம் "முக்கண்ணன் தானே.... எக்கண்ணன் தானுக்கும் எந்தை பிரானே" என எடுத்தோதி, கந்தனுக்கு மட்டுமல்ல எந்தத் தோற்றத்துக்கும் சிவனே எந்தை பிரான் என்றிருத்தலுங் காணலாம் . சிவகுமாரர் எனப்பட்டோரெல்லாம் இந்த வகையில் சிவயோக தரிசனிகளால் தத்தம் அகமுகக் காட்சியிற் கண்டு கொள்ளப்பட்டவர்கள் அவர்கள் வேறெவ் வாற்றானுமல்ல. சிவனிடத்திருந்தே தோன்றியவர்கள் ஆதலின் மைந்தர்களானார்கள் என்பதற்கு இவ்விளக்கம் போதுமானது. வைரவர் நிலை கந்தன் நிலைபோல நேரே தெரிவிக்கப்படாமல் இதே நாலாந் தந்திரத்தில், பைரவி மந்திரம் என்ற பகுதியில் ஏழாம் மந்திரத்திற் சூசிக்கப்பட்டுள்ளது. வைரவர்க்குரிய சூலம், கபாலம், நாகபாசம் எல்லாம் அங்கு தோற்றமளிக்கின்றன. சிவாகமங்கள் கூறும் உண்மைகள் திருமந்திர உண்மைகள் போற் சிவயோக நேர்முகக் காட்சியுண்மைகள் என்பதை நினைவு கூர்தல் தகும்.

## வைரவர் தோற்றம்

சிவயோகக் காட்சியுண்மைகள், அவ்வுண்மைகளை உணரக் கூடிய தகமை யுள்ளவர்கள் தம்புறத்திலுங் கண்டறியத் தக்கவாறு சிவனாற் செயல் மூலங் காட்டப்பட்ட நிகழ்ச்சிகள் சைவ வரலாற்றில் வெகு பல. விநாயகர் தோன்றிக் கஜமுகனைச் சங்கரித்தது போல ஸ்கந்தர் ஆறுமுகராய்த் தோன்றிச் சூரனைச் சங்கரித்தது போல மற்றும் ஒரோவோர் சந்தர்ப்பங்களிற் சிவனிடத்திலிருந்து தோன்றிய ஒருவரே வைரவர் ஆவார். வைரவர் தோற்றம் மூவேறு தடவைகளில் மூவேறு காலங்களில் நிகழ்ந்ததாகச் சொல்லப்படுகிறது. ஆனால் மூன்றும் ஆதிக்கிரமமான செயல்களில் ஈடுபட்டவரை நிக்கிரகஞ் செய்யத் தோன்றிய உக்கிர மூர்த்தங்களாயிருத்தல் காணலாம். வைரவர் என்ற பெயரே அதைப் பிரதிபலித்துக் கொண்டிருத்தல் கவனிக்கத் தகும். பீரு – பயங்கரம், வைரவர் – பயங்கரமானவர்.

பிரமன், ஐதன் தலைகளைந்தில் நடுத்தலையால் சிவநிந்தை செய்தபோது அத்தலையைத் தடிந்து அவனை நிக்கிரகஞ் செய்யத் தோன்றிய சம்பவம் ஒன்று, சிவபக்தர்களைத் துன்புறுத்த வந்த கஜாசுரன் என்ற ஆனையை (காசியில்) நிக்கிரகிக்கத் தோன்றிய சம்பவம் ஒன்று. இரணியவதத்தினாற் கர்வங் கொண்ட நரசிம்ம வடிவினராகிய விஷ்ணுவைத் தோலுரித்து நிக்கிரகிக்கத் தோன்றிய சம்பவம் ஒன்று. இம்மூன்று வைபவத்திலும் சிவனிடமிருந்து வைரவர் தோன்றியுள்ளார். (என்றால் வைரவர் மூவர் என்பதல்ல; வைரவர் தோற்றத்தை உணர்த்திய சந்தர்ப்பங்கள் தான் மூன்று. வைரவர் ஒருவரேதான்) இவற்றுக்கு மிக நம்பகரமானவையும் நமக்கு அண்மையானவையும் ஆன ஆதாரங்கள் நமது தேவாரங்களிலேயே உள.

*"பிரமன்தன் சிரமரிந்த பெரியோய் போற்றி*

*"மாலாகி மதமிக்க களிறு தன்னை*
*வதைசெய்து மற்றதனின் உரிவை கொண்டு*
*மேலாலுங் கீழாலுந் தோன்றா வண்ணம்*
*வெம்புலால் கைகலக்க மெய் போர்த்தானே".*

*"விரித்தபல் தலைகொள் சூலம் வெடிபடு தமருகங்கை*
*தரித்ததோர் கோலகால பைரவனாகி வேழம்*
*உரித்துமை யஞ்சக் கண்டு ஒண்திரு மணிவாய் விள்ளச்*
*சிரித்தருள் செய்தார் சேறைச் செந்நெறிச் செல்வனாரே"*

– இவை மூன்றும் அப்பர் சுவாமிகள் தேவாரங்கள்.

பரமனை மதித்திடா........ என்ற விருத்தம் வைரவர் தோத்திரமாயிருத்தல் பிரசித்தம். இது கந்தபுராணப் பாயிரத்தில் உள்ளது. இதற்கு அடுத்த விருத்தம், அக்கினிமீது புகை போர்த்தது போல செந்நிற மேனியின் மீது புகைநிற ஆனைத்தோல் போர்த்தவராக வைரவ வாணனை கூறுகிறது. இதே போல கடம்பவன புராணத்தில் வரும் வைரவ துதியொன்று அவர் சிவன் நெற்றியிற்றோற்றி, விஷ்ணுவின் தோலைச் சட்டை செய்தணிந்து (அரி சரும கஞ்சுகியாய்) வேதமாகிய நாய் வாகனத்தில் உலாவும் (வேத எகின் ஊர்ந்து) நிலையைத் தெரிவிக்கின்றது. சீகாழிப் புராணத்தில் வரும் வைரவ துதி, அவர் நரசிம்மத்தை உரித்து எடுத்த தோலை அரையிற் சுற்றியிருப்பதும் தன்னால் உரிக்கப்பட்ட விஷ்ணுவின் எலும்புகளால் அமைந்த தண்டம் ஒன்றைக் கையிற் கொண்டு, தோலினாற் சட்டையிட்டுச் (அங்கி) சட்டைநாதன் என்றிருக்கும் நிலையைத் தெரிவிக்கின்றது.

## சிவாகமங்களில்

சிவாகமங்களில் மூர்த்தியிலட்சணந் தெரிவிக்கும் பகுதிகள் அவற்றிலுள்ள தியான சுலோகங்களாகும். மேற்கூறிய இலட் சணங்களுடன் வைரவர் உடுக்கு, சூலம், கபாலம் ஏந்தியிருத்தலும், நிர்வாணியாயிருத்தலும், அக்கினிச் சுவாலை போல் மேல் நோக்கி உயர்ந்த செஞ்சடை கொண்டிருந்தலும், "ஹூம்" என்று அதட்டும் பயங்கரமான முகத் தோடிருத்தலும் கோரப்பல் விளங்க இருத்தலும், சர்ப்ப அரைஞாண், சர்ப்ப உத்தரீயம் பூண்டிருத்தலும் ஆகிய லட்சணங்கள் சிவாகம தியான சுலோகங்களிற் கூறப்படுகின்றன.

இவ் வரலாறுகளிற் குறித்த நிகழ்வுகள் சிவன் செயல்களாகத் தேவாரத்தில் இருக்கப் புராண துதிகள் ஆகம தியான சுலோகங்களில் அவை வைரவர் செயல்களாகக் கூறப்பட்டிருத்தல் மாறுபாடாகாது. என்னை? எல்லாஞ் சிவன், சிவனே மற்றும் மற்றும் சிவமூர்த்தங்களாவதும் என்ற ஏகபரத்துவக் கொள்கையைப் பிரதிபலிப்பது தேவாரம். குறித்த மூன்றாவது தேவாரத்தில், "சேறைச் செந்நெறிச் செல்வனார்" என்றது சிவனை. அவரே, "பைரவனாகி வேழம் உரித்து" என்றதனால் அந்நேரம் அவர் கொண்ட கோலமே வைரவக் கோலம் என்றாகிறது. அவ்வகையிற் சிவன் கோலம் மாறும் நிலையும் சிவகுமாரர் நிலையும் ஒன்றே. நம்முட் பிரசித்தமான, "அருவமும் உருவுமாகி.........." என்ற கந்தபுராணப் பாடல் சிவனே சுப்பிரமணியர் ஆனமையைத் தெரிவிக்கும் நயம் அறியத் தகும். பிரமம், ஓர்மேனியாகி, முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டு, ஒரு திரு முருகன் வந்து உதித்தனன் என்கிறது அப்பாடல். அப்பர் சுவாமிகள் பாடலின் சிவன் பைரவனாகி என்றதும், இப்பாடலில் பிரமம் முருகனாயுதித்தனன் என்பதும் ஒரே துணிபின.

## சட்டை நாதர்

சிவகுமாரர் என்ற ரீதியில் விநாயகர் சுப்பிர மணியர்களைவிட வைரவர் சிவ உறவின் செறிவு கூடுதலாக விளங்கக் கூடிய நிலையில் இருத்தலும் ஒரு சிறப்பாகும். அகண்ட வியாபகியாகிய சிவனுக்கு ஏது ஆடை? அதனால் அவர் 'நக்னர்' – ஆடையில்லாதவர். இந்த ஆடையின்மை வைரவரின் சிறப்பிலக்கணமாக அமைகிறது. அவ்வகையில் செஞ்சடை உடுக்கு, கபாலம், சூலம் என்பனவும் சிவனுக்கும் சாங்கங்களாக (அங்கங்களைச் சார்ந்த வையாக) உள்ளனவே. அன்றியும் சிவனுக்கு அமையும் பல்வேறு மூர்த்தங்களில் சட்டை நாதர் என்பது மிக விநோதமான மூர்த்தமாகும். விஷ்ணுவை உரித்த தோலால் அமைந்த நீளச்சட்டை அணிந்து வலக் கரத்தில் உடுக்கும், இடக்கரத்தில் கபாலமும், தோளில் மூவிலைச் சூலமும் விளங்க இருக்கும் இம்மூர்த்தம் மிகக் கவர்ச்சிகரமானது. சட்டையணிந்திருக்கும் விசேட காரணத்தால் சட்டைநாதர் எனப் பெற்றுள்ளது இம்மூர்த்தம். சிறுத்தொண்ட நாயனாரை ஆட்கொள்ள வட தேசத்திலிருந்து வந்த சிவமூர்த்தம் இது ஆதலின் அவர் ஊராகிய திருச்செங்காட்டங்குடியில் இது உத்தராபதியார் என வழங்குதல் பிரசித்தம். (மாவிட்டபுரத்தில் இருந்து அண்மையில் மறைந்த இசைமேதை ஒருவர் செங்காட்டங்குடியைச் சேர்ந்தவர். அவருக்கு இங்கு வழங்கிய உருத்திராபதி என்ற பெயர் உத்தராபதியார் என்பதன் தழுவலாயிருக்கக் கூடும்) பெரிய புராணம் சிறுத் தொண்ட நாயனார் புராணத்தில் வரும் 26 முதல் 34 வரையுள்ள பாடல்களில் இடம்பெறும் இவர் பற்றிய வர்ணனை புராணத்துக்குத் தனிச் சோபை அளிக்கின்றது.

இதுபோன்ற ஒரு மூர்த்தம் சீகாழிப் பிரமபுரீஸ்வரர் கோயிலின் பின்புறத்திலுள்ள தோணியப்பர் கோயிலின் கீழ்த் தலத்திலுமுண்டு. இதன் ஞாபகமாகப் போலும் யாழ். நல்லூரில் அமைந்துள்ள பழைய சிவாலயமொன்று சட்டைநாதர் கோயில் என்ற பெயரால் இன்னும் வழங்கப்பட்டு வருகிறது. சிவன் வைரவக் கோலம் எய்தினாரா? வைரவர் தான் சிவக்கோலமா என்ற சங்கைக் கிடமின்றி இரண்டுக்கும் ஏகநிலையாய் அமைந்த இச்சட்டை நாதமூர்த்தம் சிவ – வைரவ ஒற்றுமையின் உயர் நிலையாகும்.

**வைரவர் கறுப்பா**

வைரவர் என்றதுமே ஒரு கரிய தோற்றம் மனக் கண்முன் விழும் நிலையொன்று நம்மவரைப் பொறுத்த வரையில் இருப்பதாக அறியப்படுகிறது. தன் கணங்கள் சூழக் காரிருளில் திரிபவர் என அறியப்படும் போது அக் கருமைக் காட்சி மேலும் அதிகரிக்கும் நிலையுமுண்டு. அது சும்மாவல்ல; அதில் உண்மையுண்டு. ஆனால் வைரவர் கறுப்பு மட்டுமல்ல. வெண்மை, செம்மை நிறப் பண்புகளும் அவருக்கு உள்ளனவே. அதன் விளக்கம் வருமாறு

ஒருவராகிய வைரவரே உயிர்களின் நிக்கிரக அநுக்கிரகங்களின் பொருட்டு மூவிதவர்ணங் கொள்கிறார் என்கிறது ஆகமம். காரணாகமத்தில் இது பற்றிய விளக்கமுண்டு. பக்குவவான் மாக்களுக்கு முத்தியளிக்கும் பொருட்டு அவர் தாங்கும் வர்ணம் வெண்மை. வெண்மை நிறம் சாத்துவிக குண அறிகுறி. அதனால் அவ் வர்ணத்திலுள்ள வைரவர் சாத்துவிக மூர்த்தி. பொதுவில் உயிர்களின் இஷ்டகாமசித்திகளை வழங்குதற்கு அவர் பொருந்தும் வர்ணம் செம்மை நிறம். செம்மை இராஜதகுண அறிகுறி. அதனால் அவ்வர்ணத்திலுள்ளவர் இராஜத மூர்த்தி மற்றையது தாமச குண அறிகுறியாகிய கருமை வர்ணங் கொள்ளும் தாமசமூர்த்தி. அதனாலே தான் இங்கு வெட்டு வேளாண்மைகள் மிகப் பிரமாதம். எப்படி? நோய், பிணி நீக்கம், பேய், பில்லி, பிசாசு முதலியவற்றாலாம் கெடுதி நீக்கம், ஆதிமனித தேவையொடுபட்ட ஏனைய அனைத்தும் கருமை நிறத் தாமச மூர்த்தியாலேயே ஆவன. அவ்வாறிருந்தால், அவ்வத் தேவைக்குரியவர் வைரவ மூர்த்தியைத் தம் தேவைக்குப் பொருத்தமான வர்ணத்தில் தியானிக்க வேண்டியவராகின்றனர். இந்நோக்கில் நாம் வைரவரைக் கறுப்பாகவே காண்பதில் அபாரப் பொருத்தமுண்டு.

**பல நிலைகளில் வைரவர் ஏன்?**

வைரவர் சிவமூர்த்தம், சிவகுமாரர். ஆதலால் மற்றும் விநாயகர், சுப்பிரமணியர்கள் போல முறையான ஆலயத்திற் பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபடப்படுதல்தானே பொருந்தும். அதைவிட்டு, சந்தி, தெரு, கிணற்றடி, மரத்தடி, சுடலை எல்லாம் வைரவர் இருப்பதும் சில இடங்களில் மிக எளிய பாங்கிற் பலி நிகழ்ச்சி உருவாடுதல் கூட இடம்பெற வைரவ வழிபாடு அமைந்தது ஏன் என்பது பரவலாக எங்குமுள்ள ஒரு ஆசங்கை, அதுவும் விசாரித் தற்குரியதே.

சிவன் நோக்கில் அவர் எந்த அளவுக்கு அரியரோ அந்த அளவுக்கு எளியருமாதல் ஒருண்மை. அது சிவகுமாரர்களாகவுள்ள விநாயகர், சுப்பிர மணியர், வைரவர்களுக்கும் விலக்கல்ல, ஒரு பிடி சாணம், மூன்று அறுகு அளவில் பிள்ளையார் அமைந்துவிடுதலும், இரும்பிலோ, செம்பிலோ, பித்தளையிலோ இலை வடிவில் அமையும் ஒரு வேலிற் சுப்பிரமணியர் அமைந்து விடுவதும் சைவ பாரம்பரியம் அறிந்த செய்திகள்.

இனி உயிர் நோக்கில் எல்லா உயிரும் (சனம்) ஒரே வித வழிபாட்டமைப்புக்குள் அமைதல் முடியாது. அவரவர் அகச் சூழ்நிலை, புறச் சூழ்நிலைகளுக்குப் பொருந்துமளவு வழிபாட்டமைதிகளும் வெவ்வேறு அமைய வேண்டுதலும் அவசியம். எவ்வெந் நிலையி லுள்ளாரும் எவ்வாறோ கடவுள் வழிபாடு நடத்தியே முடித்தாக வேண்டுவது அவரவர் படைப்பு நியதியோடொத்த அலுவல். "என்னைத் தொழத்தான் உன்னைப் படைக்கின்றேன்" என்று படைக்கும் போது சிவன் ஒவ்வொருயிருக்குஞ் சொல்லி வைத்தது போலக் காணும் அளவுக்கு ஏதேனுமோர் வகையில் கடவுள் வழிபாடாற்றிவிட வேண்டும் நிலை ஒவ்வோர் உயிர் சார்பிலும் உண்டு. அது இயற்கை. "ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ" (சனங்களிடத்தில் வழிபடும் வழக்கம் எவ்வெக் காரணங்களால் ஏற்பட்டது என அரசியல், சமூகப் பின்னணியில் ஆய்வு நிகழ்த்தல், சாமானிய நெஞ் செரிப்பு வேலைகளில் ஒன்று).

இவ்வகையில் பார்த்தல் முறையான கோயிலமைப்பு வழிபாடொன்று மட்டுமே இருந்து விடவும் முடியாது; முறையான ஆசார அநுட்டான வழிபாடொன்று மட்டுமே இருந்து விடவும் முடியாது. எல்லார்க்கும் இடம் வேண்டும். சுருங்கச் சொன்னால், தவிர்க்க முடியாத வகையில் கொன்று

குடித்துக் களித்து அதனிடையே விபூதிக் கோலத்தில் அரோஹராவும் போட்டுக் கூத்தாடுதல்தான் வழிபாடு என்றதற்கான அகச் சூழ்நிலை, புறச் சூழ்நிலைகளில் ஒருவர் இருப்பாராயின் அவருக்கு அதுவே யதார்த்த வழிபாடு. அவர் வழிபாட்டை ஏற்று அதற்கும் ஆம்பலன் கொடுக்க வேண்டியது அவராற் கருதப்படும் கடவுளின் கடப்பாடும். அவர் வழிபடும் உண்மையான உள்ளுணர்வுடன் கூடியதாயிருக்க வேண்டியதே அவசியம். அப்படியிருக்கின் அவ் வழிபாட்டின் மூலமே படிப்படியாக அவரைப் போதித்து மேல் நிலை வழிபாட்டுக்கு அவரை உயர்த்தும் வழியைத் திருவருள் அறியும் என்கிறது சைவம்.

தனிமையில் ஒரு சூலத்தை வைத்து வைர வரைச் சாத்விக மூர்த்தியாகக் கண்டு வழிபடுபவர் அதன்மூலம் மேல்கதி மோக்ஷப் பேறுகளைச் சார்தலுங் கூடும். அதே நிலையில் அவரைத் தாமச மூர்த்தியாகக் கண்டு வழிபடுபவர் அதற்களவான சாதாரண பலன்களைப் பெறுதலுங் கூடும். இச்சைவ உண்மைக் கிணங்கவே சைவத்தில் எளியமுறை (இலகுமுறை என்றால் உசிதம்) வழிபாடு ஏற்பட்டுள்ளது. இவ்வகையில் விநாயகர், சுப்பிர மணியர்களை விட அதி ஆயிரமடங்காக வைரவர் இந்த இலகுமுறை வழிபாட்டுக்கு இடங்கொடுத் துள்ளார் என்பது அவர் சார்பிற் காணும் ஒரு விசேஷம் எனலாம். மற்றவர்களைவிட அதிகமாக வைரவர் வெகுசன ஆராதனை மூர்த்தி (Popular Deity) ஆயுள்ளார் எனல் பொருந்தும். எனவே, சுடலை வைரவர், காட்டு வைரவர், இரத்த வைரவர் போன்ற பெயர்களைக் கேட்குமளவில் அவை அர்த்தமற்றவை என்றோ தரக்குறைவானவை என்றோ கருதுவதில் அர்த்தமில்லையாகும். ஆரார் கும்பிடப்பட்டாலும் வைரவர் வைரவர்தான். எங்கிருந்தாலும் எந்நிலையில் இருந்தாலும் வைரவர்தான் என்ற பயபக்தி எல்லார்க்கும் வேண்டும்.

இன்னும் வைரவர் சார்பில் இலகு வழி பாட்டாளர் சிலரிடை இரத்த பலி, மாமிச நிவேதனம் வழங்கும் வழக்கம் இருந்ததுகூட மேற்குறித்த வைரவர் பற்றிய வரலாற்றம்சங்களை லௌகிக ரீதியான பருமட்ட விளக்கத்தில் எடுத்துக் கொண்ட தன் விளைவேயாம். வைரவர் சிறுத்தொண்டரிடத்தில் மாமிச உணவு கேட்டவர். பிரமசிட்சை, விஷ்ணு சிட்சை, ஆனைபுரிப்புகளில் இரத்தக் களரி கண்டவர் ஆதலால் நாமும் அவற்றின் மூலமே அவரைப் பிரீதி செய்யலாம் என்று கொண்ட அபிலாஷை விளக்கத்தின் விளைவு அது. அபிலாஷைப் பூர்த்தியல்ல, ஆன்ம ஈடேற்றமே வழிபாட்டுப் பூர்த்தியென்பதில் நம்பிக்கை உள்ளோர் குறித்த வரலாற்று அம்சங்களைத் தத்துவ ரீதியான நுண்பொருள் விளக்கத்தில் எடுத்துக் கொண்டு அதற்கேற்றாற் போல் வழிபாட்டு முறையை மாற்றியமைப்பர். சுவாமிக்கு உணவு, பானம் வைத்துப் பூசிப்பது ஆகம சம்மதம். அதன்படி இறைச்சிக்குப் பதில் வடை உணவாகவும், இரத்தத்திற்குப் பதில் இளநீர் பானமாகவும் கொள்ளும் வகையால் இவர்களின் வழிபாடு கொலைப்பலி தீண்டாத பாவன வழிபாடாகவும், (இறைச்சி மாமிச பண்டம், வடை மாஷ [உழுந்து] பண்டம் என்ற சொல்லொலி ஒற்றுமை கூட இதிலுண்டு) இன்னும், குறித்த வரலாற்றம்சங்களில் உள்ள இறைச்சியின் அறிகுறிப் பொருள் இலௌகிக மசப்பு. இரத்தத்திற்கு அறிகுறிப் பொருள் அஞ்ஞான மதர்ப்பு தத்துவரீதியான நுண்பொருள் விளக்கமாகும். லௌகிக மசப்பையும் அஞ்ஞான மதர்ப்பையும் நீக்குவதே நமக்கு உள்ள உண்மைத் தேவை. தசையையும் இரத்தத்தையும் நாடும் மனநிலை குறித்த மசப்பையும் மதர்ப்பையும் நீக்குவதற்குப் பதில், மேலும் ஆக்குதற்கே வழி வகுக்கும் என்ற விளக்கம் அவசியமாகும். இவ் விளக்கத்தின் அடிப்படையில் எங்கெங்கும் எல்லாரிடத்தும் வைரவ வழிபாடு நிகழக் கூடிய சூழ்நிலையை ஆக்குதலில் நிரம்பப் புண்ணியமுண்டு. ஆனால், அது பலாத் காரத்தினாலல்ல, நாகரிகப் போர்வையளவிலல்ல, சம்பந்தப்பட்டவரிடத்தில் உண்மையறிவு விளக்கம் ஏற்பட வைக்கும் வகையால், அவர்களில் மனத்திருப்பம் நிகழ வைக்கும் வகையால் நடைமுறைப்படுத்தப்படுவதே உண்மை நெறி. முடியுமான அளவுக்கு கோயிலிலல்ல, அடுக்களையிற் பலி நிறுத்தப் போராட்டம் நிகழ்தல் மிக விரும்பத்தகும். அங்கே அது நிறுத்தப்பட்டு விட்டால் பிறகு அது இங்கே வரவே வராது. திருவள்ளுவர் வெகு நாகரிகமாகச் சொன்னதை நினைவிற் கொள்ள வேண்டும்.

*"தினற் பொருட்டாற் கொல்லாதுலகெனின் யாரும்*
*விலைப் பொருட்டால் ஊன்தருவார் இல்."*

மறியப் போராட்டம் வேண்டுவது மாமிசக்கடை முன்னல்ல, உணவு விடுதியின் முன்னுமல்ல. சோற்றுக் கோப்பைக்கு முன் என்ற விளக்கம் மலரவேண்டும்.

### க்ஷேத்ரபாலர்

வைரவர்க்குள்ள பல வேறு நாமங்களில், க்ஷேத்ரபாலர் என்ற நாமம் பிரபல்யமானது. அவர் பண்பாக அறியப்படும் பிரத்தியேகமான உக்கி ரத்தன்மை அவர் காவற்றொழிற் தகைமை யுள்ளவரெனக் காட்டும் யாகாதிகாரியங்களிலும்,

க்ஷேத்ரங்கள், நகரங்கள், கிராமங்கள் அமைக்கும் வேளைகளிலும் அவரைக் காவற்றெய்வமாக அமைத்துக் கொள்ளும் நிலையுண்டு. யாகசாலைப் பந்தோபஸ்து அதிகாரியாக அவர் கிரியை ரீதியாக நியமனம் பெறுதலால் யாகரக்ஷகர் என்ற பெயரும் வழங்குவதுண்டு. க்ஷேத்ரம் என்பது சிவதலம். அதற்குப் பாதுகாப்பாளர் என்பது க்ஷேத்ரபாலர் என்பதன் பொருளாகும். நகரங்களும், கிராமங்களும் ஒரு வகையில் அதாவது சிவதலங்களை மையமாகக் கொண்டுள்ளவை என்ற வகையில் க்ஷேத்ரங்களாம். அதனால் க்ஷேத்ரபாலர் என்ற பெயர்ப் பிரயோகம் விரிவு பெற்றிருக்கின்றது. வைரவர் காவற்றெய்வம், கிராம தேவதை என்ற விளக்கத்துக்கு இடந்தந்தது இதுவேயாகும். இந்த நிலை அவருக்கு நியமன வகையால் நேர்ந்ததே தவிர அவர் உண்மை நிலை காவற்காரன் (Watcher) நிலைதானல்ல.

பரமசிவன், பராசக்தி என்ற இருவரைத் தவிர அவர்களின் மூர்த்தி பேதங்கள், குமாரர்களாயுள்ள அனைவரையும் கிரியாவான்கள் தமது கிரியையில் குறிக்கப்பட்ட ஒவ்வோர் நியமனத்தை ஏற்கும்படி வேண்டிக் கொள்ளும் நிலை ஆகம ரீதியாக உண்டு. அதேவேளை, அக் கிரியாவான்களின் தியான பாவனைகள் சரி சுத்தமானவையாய் இருக்கும் பட்சத்தில், பெரு மனசு வைத்து அவர்களின் வேண்டுதலுக்கு மாறாது இசைந்திருக்கும் தாராளமான கண்ணோட்ட நிலை குறித்த தெய்வ மூர்த்தங்களுக்குண்டு. தம் பெருமையைப் பொருள் செய்யாது தம்மை வேண்டிக் கொள்ளும் தகுதி வாய்ந்த கிரியாவானின் தேவையைப் பூர்த்தி பண்ணி வைக்குங் கருணையால் எந்த நியமனத்தையும் ஏற்க இவர்கள் தயங்குவதில்லை. சிவபெருமான் 'தம் பெருமை தானறியாத் தன்மையன்காண் சாழலோ' என்கிறது திருவாசகம். இவர்களும் அதே பண் பாளர்கள். விநாயகப் பிரதிஷ்டைக்கு நிகழும் யாகத்தில் வைரவர் ஆவரண மூர்த்தியாக இடம் பெறுவது போல வைரவர் பிரதிஷ்டைக் கிரியையில் விநாயகரும் அவ்விதம் இடம் பெறுவதுண்டு. ஆதலால் க்ஷேத்ரபாலர் என்பதற்காக வைரவர் தரங் குறைந்தவராகக் கொள்வதற்கில்லை. ஏன்? துவார கணபதி, துவார சுப்பிரமணியர் என்ற நிலையில் வாயிற் கோபுரத்துக்கு வெளியில் கணபதியும் சுப்பிரமணியரும் இடம் பெறுதல் உண்டு தானே. அது போல்வதே இதுவும் எனக்கொள்ளுதல் வேண்டும். ஆதலால், ஆலயங்களிலும் பிற இடங்களிலும் க்ஷேத்ரபாலர் என்ற பெயரில் உள்ள வைரவரும் கண்ணியமான முறையிற் போற்றல் பெற வேண்டியவர் என அறிந்து கடைப்பிடித்தல் நன்று.

### மந்திர தந்திர மாயங்கள்

குறுக்கு வழியிற் பட்டம் பெறுதல், பதவியுயர்வு பெறுதல், பணமீட்டுதல் என்ற நிலைகள் சமூகத்திற் பழக்கப்பட்டுப் போய்விட்ட காரியங்கள். அவற்றுக்குச் சமாந்தரமாகச் சுவாமி தெய்வங்களையும் சாட்டிக் கொண்டு மந்திர தந்திர சாதனையாளர்கள் குறுக்கு வழி இலாபம் நாடுவதுண்டு. அறிவறியா மக்கள் தத்தம் அபிலாஷைப் பூர்த்தியை முன்னிட்டு அவர்களில் மயங்கி மாய்வதும் உண்டு. ஓங்கார வைரவர், நரசிம்ம வைரவர் முதலாய பேர்களின் போர்வையில் இளைக்கட்டு, பெல்லி, சூனியம் என்ற பல வித்தைகள் இன்றும் சைவத் தமிழுலகில் விசேடமாகக் கிராமாந்தரங்களில் மலிந்துள்ளன. உண்மைநிலை விளக்கத்தின்படி சிவகுமாரர் களாகிய வைரவர் முதலியோர் இதற்கு உடன்பாடானவர்கள் அல்லர். தாங்கள் செய்ய வேண்டும் யதார்த்தமான துஷ்ட நிக்கிரகசிஷ்ட பரிபாலனங்களுக்கு மற்றொரு மந்திரவாதியின் முயற்சியை வேண்டும் நிலையில் அவர்களில்லை. அநாசார முறையில் வழிபட்டாலுங் கூட உண்மை அன்பினால் வழிபடுவார்க்குப் பயனருளும் அவ்வளவே அவர்கள் நிலை என்பது சுருதி யுக்தி அனுபவம் மூன்றுக்கும் பொருத்தமான விளக்கமாம். ஆதலால், குறித்த வித்தைக்காரர்கள் வேறேதோ துஷ்ட தேவதைகளிற் சிக்கிநின்று கொண்டு இவர்களின் பெயரைத் துஷ்பிரயோகம் பண்ணு கிறார்கள் என்பது தெளிவாகும்.

ஆரம்பத்திற் கண்டவாறான சைவத்தின் அகண்ட வியாபக வளாகத்துள் இவைகளும் எப்படியோ சட்டவிரோதமாகக் குடியேறிவிட்டன. இவைகளை நாடு கடத்தும் முயற்சி எப்போதும் வேண்டப்படுவது. ஆலயங்களில் யதார்த்தமான வழிபாட்டு முறைகளை அனுசரித்தலும் அவை பற்றிய விளக்கங்கள், பரந்த அளவில் வழிபாட்டாளரிடத்தில் ஏற்படக்கூடிய கல்வி, போதனை, பிரசார முறைகள் கையாளப்படுதலும் சைவத்தின் வருங்கால நல் வாழ்வுக்கு இன்றியமையாத இன்றைய தேவைகளாம்.

ஆலயங்களிற் சாமான்ய பூசைகளிற் சனங்கள் கூடுவதில்லை. சன்னதமும் பேயாட்டுமென்றால் சாரியாய்த் திரள்கிறார்கள். இது ஏன் என்பதைச் சிந்திக்க வேண்டும் செயலாற்ற வேண்டும். இன்றைய இரு பெருந் தேவைகள் இவையாம்.

# மணிவாசகம்

- இயற்றமிழ் வித்தகர் பண்டிதர் ச. சுப்பிரமணியம் -

''உரை உணர்வு இறந்து நின்று உணர்வதோர் உணர்வு'' என்பது திருவாசகம். இதற்கு வாச்சியமானவர்மன்றுள் நின்றாடும் மணிகண்டராகிய பெருமான். மெய்கண்டார் அருணந்தி சிவாசாரியர்க்கும் சுட்டுவிரலாற் காட்டி உணர்த்தியது போலவே மாணிக்க வாசக சுவாமிகளும் தில்லை வாழந்தணர்களுக்கு இவரே பொருளெனச் சுட்டிக் காட்டித் தம்முருக் காட்டாது சிற்சபேசருடன் அத்துவிதக் கலப்பாய் ஐக்கியமாயினர். அவர் முத்தியடைந்த திருநாள் ஆனிமாமகமென்று மாகேசுர பூசை வழிபாடு நிகழ்கிறது.

இந்த மணிவார்த்தைகளைத் திருச் செவியேற்ற தில்லைக்கூத்தரே அந்தணராக எழுந்தருளி மணிவாசகர் முன்னே அவரைப் பாடச்செய்து மீட்டும் செவியேற்றார். அதனை அப்படியே ஏடும் எழுத்தாணியும் தாங்கித் திருக்கையால் எழுதியருளினார். ஆராமையாலே திருச்சிற்றம்பலக் கோவையாரும் பாடுவித்துக் கேட்டருளினார்; ஏட்டில் பதித்தருளினார்; ''வாதவூரன் சொல்ல அம்பலவன் எழுதியது'' எனக் கைச்சாத்திட்டு ஏட்டைக் காப்புச் செய்து உலகுக்கு உபகாரமாகச் சிற்றம்பலத்தில் வைத்தருளினார்.

பூசிக்கவந்த தில்லைவாழந்தணர் கண்டு அதிசயித்து அத்திருவேட்டை எடுத்து வாசித்துத் திருவாதவூரடிகளிடம் சென்று நிகழ்ந்தது கூறிப் பொருள் உணர்த்த வேண்டினர். அவர் அந்தணரோடு சிற்றம்பலம் அடைந்து அவரே பொருளெனச் சுட்டிக் காட்டி அகத்தே சென்று அம்பலவரோடு ஐக்கியமாயினர்.

ஏகாதசம் எனும் மந்திரங்கள் போலமைந்தவை திருமுறைகள் பதினொன்று. அவற்றுள்ளே சிகாமந்திரம் போலச் சிறந்து நிற்பது எட்டாந்திருமுறையாகிய திருக்கோவை திருவாசகம் என்பன. திருவாசகத்துக்கு உருகாதார் இல்லை. பாடுவோர் கேட்போர் உள்ளங்கள் அன்பு மீதூர்ந்து நிற்பர். ஆனந்தக் கண்ணீர் சொரிய, உரோமபுளகம் போர்க்க, விதிர் விதிர்த்து பரவசராகி நிற்பார்கள்.

இதனை நாம் என்றென்றும் ஆலயங்களிலும் மற்றும் பக்தர் கூட்டங்களிலும் காண்கின்றோம். ''அம்மையே அப்பா ஒப்பி லாமணியே அன்பினில் விளைந்த ஆரமுதே'' எனப் பாடக்கேட்டு எவர்தான் பக்திபரவசமாகாது நிற்பவர். இவ்வாறே திருவாசகப் பாடல் ஒவ்வொன்றுமே'' சோதியே சுடரே சூழொளி விளக்கே'' எனவும் காணலாம். போற்றித் திருவகவல் ''தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி'' எனும் தொடர்களும் எந்நாளும் அன்பர்களது வாயிலும் மனத்திலும் மருவிநின்று அகலாத மாண்பினவன்றோ.

கற்றவர்கள் யாவரும் உச்சி மேல்வைத்து உயர்ந்ததெனப் போற்றும் அன்பினைந்திணைச் செந்தமிழ்ப்பனுவல் திருக்கோவையார் என்பதாம் இது முன்னே தலையில் தெய்வீகப் பண்புகுறிக்கும் திரு என்னும் அடையும், பின்னே இறுதியில் உயர்த்தற் பண்பு குறிக்கும் ஆர்விகுதியும் பெற்ற பெயராக விளங்குவதே இதன் மகத்துவத்தைக் காட்டுகிறது. இத்திருக்கோவையார் பற்றிய ஓர் ஆய்வுரையும் அணிந்துரையுமான பாடலைக் காண்போம்.

*''ஆரணங்காணென்பர் அந்தணர்; யோகியர் ஆகமத்தின்*
*காரணங் காணென்பர்; காமுகர் காமநன் னூலென்பர்;*
*ஏரணங் காணென்பர் எண்ணர்; எழுத்தென்பர் இன்புலவோர்;*
*சீரணங் காயசிற் றம்பலக் கோவையைச் செப்பிடினே.''*

சிறந்த தெய்வப் பெண் போல விளங்கும் கோவையாராகிய நூல் கற்றோர் எவருக்கும் வெவ்வேறு வகையாய் அவ்வவர் அறிவுக்கமைந்த நூலாக விளங்குமாம். இந்நூலிலிருந்து அற்புதமான மூன்று திருப்பாடல்களைப் படித்துப் பார்ப்போம்.

*"ஈசற்கு யான்வைத்த அன்பின் அகன்று, அவன் வாங்கிய என்*
*பாசத்திற்காறென்று, அவன் தில்லையின் ஒளிபோன்று, அவன்தோள்*
*பூசத்திரு நீறெனவெளுத்து, ஆங்கவன் பூங்கழல்யாம்*
*பேசத்திரு வார்த்தையிற் பெருநீளம் பெருங்கண்களே."*

தலைவன் தலைவியின் கண்ணின் நயம் கூறல்.

இதிலே கண்ணின் அகலமும், கருமையும், ஒளியும், வெண்மையும், நீளமும் ஆகிய ஐந்து பண்புகள் சிவமயமான ஐந்து உவமைகளால் உணர்த்தப் படுகின்றன. உவமைகள் எவ்வாறு அளவிடங் காதவையோ கண்ணழகும் அளப்பரிதெனக் காட்டும் நயத்தோடு மற்றெந்தக் கவிகளும் காட்டாத (முடியாத) அற்புத சிருட்டியாகவும் உளது. இது விரித்துக் கூறியது. இனி மிகச் சுருக்கமாகத் திட்பநுட்பமாய்க் கூறுவது:

*"பாசத் தளை அறுத்து ஆண்டு கொண்டோன் தில்லை அம்பலம் சூழ்*
*தேசத் தன, செம்மல்! நீதந்தன சென்று யான் கொடுத்தேன்;*
*பேசில் பெருகும்; சுருங்கும் மருங்குல், பெயர்ந்தரைத்துப்*
*பூசிற் றிலள்; அன்றிச் செய்யாதன இல்லை; பூந்தழையே."*

தழை விருப்புரைத்தல்.

தலைவன் தந்த தழையுடையைத் தோழி கொடுபோய்த் தலைவியிடம் தந்து தலைவி அதனைப் பெருவிருப்போடு ஏற்றுப் போற்றியதைத் தலைவனுக்கு உரைத்தல்.

செம்மல் – தலைவரே நீர்தந்த தழையை தலைவியிடம் கொண்டுபோய்க் கொடுத்தேன்; ஆதரவோடு வாங்கினாள். பின் அவள் அதனைப் பாராட்டிப் போற்றிய வகையைத் தனித்தனி சொல்ல முயன்றால் முடியாது; சுருக்கமாகச் சொல்வதாயின் அத்தழையை அரைத்துத்தன் மேனி எங்கும் பூசிக் கொள்ளவில்லை. அது பின்னும் பாதுகாத்து அன்பின் சின்னமாக வைத்திருக்க வேண்டியதால், அன்றி அத் தழையைத் தனது கண்முதலான அங்கம் எங்கும் அணைத்துச் சார்த்திப் பார்த்து உவப்படைந்தாள். ஒழிந்திலள் என்றாள்.

*"காரணி கற்பகம்; கற்றவர் நற்றுணை; பாணர் ஒக்கல்;*
*சீரணி சிந்தா மணி; அணிதில்லைச் சிவனடிக்கே*
*தாரணி கொன்றையன்; தக்கோர்தம் சங்கநிதி; விதிசேர்;*
*ஊருணி உற்றவர்க்கு; ஊரன் மற்று யாவர்க்கும் ஊதியமே.*

தலைவி, இதனால் தலைவன் தனக்கே உரியவன் என்ற வாதத்தைக் கைவிடுகிறாள். தலைவனின் தகுதிகளை உணர்ந்து உலகினர் யாவர்க்கும் பொதுவுடைமையானவன். எவ்வெவர்க்கும் அவ்வவர் நிலைக்கேற்ப நின்று ஆவன உதவ வேண்டிய பேருபகாரியான ஊதியன் என்று மனந்தெளிந்து பாராட்டுகிறாள்.

இறைவன் ஒருவனே எவ்வெவ் வுயிர்க்கும் பொதுவுடைமையான பசுபதி; அவன் வேண்டுவார் வேண்டியவெல்லாம் ஈந்தருளும் பெருவள்ளல்; தியாகராசன். அவன் பிறர்க்கருளும் பெற்றி கண்டு பொருமை கொள்ளவோ வெறுக்கவோ தகாது எனும் உண்மையும் உணர்த்தப்படுகிறது.

நமச்சிவாய வாழ்க என ஆரம்பித்த மணிவாசகர் தென்னாடுடைய சிவனே என்றும் எந்நாட்டவர்க்கும் இறைவா என்றும் இறுதியும் அறுதியும் உறுதியுமாக யாவர்க்கும் ஊதியமே எனவும் உரைத்தருளும் பாங்கு தலைமேற் கொளற்பாலதாம்.

எல்லாம் சிவமென்ன நின்றாய் என்றவாறு விருப்பு வெறுப்புகளை விடுத்து சர்வம் சிவமயம் எனக் கண்டு தெளிவதே மெய்யுணர்வாம்.

★★★★★★★★★★★

# சேரர் பிரானின் சிவ அன்பு

("கார்கொண்ட கொடைக்கழறிற் றறிவார்க்கு மடியேன்")

- சிவ : சண்முகவடிவேல் -

சிவபெருமான் சேர அரசரை அன்பினோடு சேரலன் என அழைத்தார். சேரலரின் பிள்ளைத்திருநாமம் பெருமாக் கோதையார். சுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்டத் தொகைத் திருப்பதிகத்தில் கழறிற் றறிவார் என்று பாடுவார். பதினோராம் திருமுறை சேரமான் பெருமாள் நாயனார் எனப் போற்றும்.

அரசர் குலத்தில் அவதரித்த சேரலனார் தம்மை அடியார் குலமாக்குவதில் ஆர்வம் காட்டினார். உரிமை அரசர் தொழில் புரியார். அஞ்சைக்களத்து அப்பருக்கு அரும் பூசையே புரிவார்.

அந்நாளில் செங்கோற் பொறையன் என்னும் அரசர் அரசாட்சியை நீத்தார். தவஞ்செய்ய வனஞ் சென்றார். அரசுரிமை பெருமாக்கோதையாரைச் சார்ந்தது. சிந்தித்தார் கோதையார். 'இன்பம் பெருகுந் திருத்தொண்டிற்கு அரசாட்சி இடையூறு' அன்பு நிலைமை வழுவாமல் அரசு புரிவதற்கு அரனார் அருளை வேண்டினார். திரு வஞ்சைக்களப் பெருமான் திருவருளால் அரச உரிமைகள் எல்லாம் கைவந்துறப் பெற்றார்.

*"அலகி லரசர் திறைகொணர*
*வகத்தும் புறத்தும் பகையறுத்து*
*மலரும் திருநீற் றொளிவளர*
*மறைகள் வளர மண்ணளிப்பார்"*

சேரலனார்.

பேரரசு நிகழ்ந்தாலும், அரசால் நிகழும் பயனும் நிறை தவமும் தேடும் பொருளும் பெருந் துணையும் தில்லைத் திருச்சிற்றம்பலத்துள் ஆடுங் கழலே எனத் தெள்ளத் தெளிந்திருந்தார். கூடும் அன்பினிற் கும்பிடுதலும் அர்ச்சனையையும் குறைவின்றி நிறைவேற்றி வருவது அரசர் வழக்கம்.

அது சேக்கிழார் வாக்கில் இப்படி அமையும்

*"வாசத் திருமஞ் சனம் பள்ளித்*
*தாமஞ் சாந்த மணித்தூபம்*
*தேசிற் பெருகுஞ் செழுந்தீப*
*முதலா யினவுந் திருவமுதும்*
*ஈசற் கேற்ற பரிசினா*
*லருச்சித் தருள வெந்நாளும்*
*பூசைக் கமர்ந்த பெருங்கூத்தர்*
*பொற்பார் சிலம்பி னொலியளித்தார்.*

சிவபூசைப் பலனாக இறைவர் நாளும் பொற்பார் சிலம்பின் ஒலி அளித்து அருளினார்.

சிவ வழிபாட்டால் சேரலனார் நாளும் இன்புற்று அமர்ந்தார்.

இப்பூமியில் இரவலர்க்கும் வறியோர் எவர்க்கும் செம்பொன்னை மழையாகப் பொழிந்தார். தேவர்களும் போற்றச் சிவயாகம் பல செய்தார்.

மதுரைத் திருவாலவாய் பெருமான் திருமுகப் பாசுரம் வரைந்து அனுப்பினார். 'சேரலன் காண் பண்பால் யாழ் பயில் பாணனார் பத்திரனார்க்கு மாண்பொருள் கொடுத்து வரவிடுப்பதுவே எனக் கண்டு பூமி நெளியச் செல்வம் வரையாது வழங்கினார், வள்ளலார். வானவரம்பர்.

ஒருநாள் சேரலனார் தூயநற் சிறப்பான சிவபூசை புரிந்தனர். பூசை முடிவில் ஆடற்சிலம்பின் இனிய நாதம் எழவில்லை. மதி மயங்கினார் பெருமாக் கோதையார்.

"பூசையில் அடியேன் என்ன பிழை புரிந்தேன்? ஆசை உடம்பால் அடையும் இன்பம் யாது? உடைவாளை உருவி மார்பில் நாட்டினார். இறைவர் திருச்சிலம்பின் ஓசையை விரைந்து கேட்பித்தார்.

உடனே வாளை அகற்றினார் வானவரம்பர். அங்கைகளை உச்சிமீது கூப்பினார். விழுந்து தொழுதார். எழுந்து நின்று "சுவாமி முன்னே சிலம்பொலி செய்து திருவருள் தராதது ஏனோ?" என்று மொழிந்தார். இறைவர் அசரீரி வாக்காக அருள்செய்தார்.

"மன்றினிடை நமது கூத்தாடல் வந்து வணங்கி வன்றொண்டன் ஒன்றிய உணர்வோடு நம்மைப் போற்றினான். உரை சேர் பதிகம் பாடினான். நின்று கேட்டு வரத் தாழ்த்தோம்" என்றார்... அவரை நினைப்பிப்பவராக.

★★★★★★★

"அடியார்க் கருளும் கருணை இருந்தவாறு என்னே !" என்று ஏம்பலிப்பார் சேரலனார். பொன்னேர் சடையார் பொன்னம்பலம் இறைஞ்சுவேன். தன்னேரில்லாத வன்றொண் டரையும் வணங்குவேன். என விரும்பி நன்னீர் நாட்டுச் செல நயந்தார் நாமச் சேரர் கோமானார்.

சேரர் தரிசனம் பெற்றதனால் வன்றொண்டர் சேரமான் தோழர் எனவும் விளங்கினார்.

கூத்தப்பிரானைக் கும்பிட்ட வானவரம்பர் – பொன்வண்ணத் தந்தாதிப் பாடலால் பொன்னம்பலப் பெருமானைப் போற்றினார். அதற்குப் பரிசிலாக செம்பொன்மணிமன் றினிலெடுத்த செய்ய பாதத் திருச்சிலம்பினொலி தாமும் எதிரே கேட்பித்தார்.

ஆரூரில் சேரலனார் நம்பியாரூரருடன் தேவாசிரியனை முன்வணங்கினார். திரு மாளிகையை வலம் வந்தார்கள். தேவர் முனிவர் வந்திறைஞ்சும் தெய்வப் பெருமாள் கழல் வணங்கினார்கள். திருவாரூரில் திரு மும்மணிக்கோவையைச் சேரலனார் கேட்பித்தார். தப்பிரானார் தாம் செவிமடுத் தருளினார்.

திருவாரூரில் பரவையார் மாளிகையில் விருந்து கொண்டார் சேரலனார். அந்த நாளில் நம்பியாரூரர் தாமும் திருநாகைக்காரோணம் சென்றிருந்தார். அங்கு 'பத்தூர் புக்கி ரந்துண்டு பலபதிகம் பாடிப் பரிசில் பெற்றுவந்தார். பொன், மணிப்பூண், நவமணிகள், ஆடை, சாந்தம், பரிமா – எல்லாம் கொண்டு வந்திருந்தார். அவை எல்லாம் அரசரை மகிழ்விக்கப் பயனுடையனவாயின.

ஒருவர் ஒருவரில் கலந்த உணர்வால் இன்பமொழி இயம்பி இனி திருந்தனர். நம்பியாரூரர் சிவவழிபாட்டைத் தொடரத் திருவுளங் கொண்டார். சேரர்பிரானும் உடனாகச் சென்றார். சோழ பாண்டிய அரசர்களோடு சேரரும் சேர்ந்து முக்கோக்களாகச் சுந்தரமூர்த்தி சுவாமிகளோடு வழிபட வந்தார்கள்.

வழிநடை வழிபாட்டு நிறைவில் சேரலனார் சுந்தரமூர்த்தி சுவாமிகளையும் சேரநாட்டிற்கு அழைத்துச் சென்றார். சேரநாட்டுச் சிவனடியார்களின் மகிழ்ச்சிக்கு அளவு காண்பதேது, 'நகர் அலங்காரத்திற்கு முடிவு ஏது !'

*"பதிக ளெங்குந் தோரணங்கள், பாங்க ரெங்கும் பாவளங்கள்*
*வதிக ளெங்குங் குளிர்பந்தர் மனைக ளெங்கு மகிற்புகைக்கார்*
*நதிக ளெங்கு மலர்ப்பிறங்கல் ஞாங்க ரெங்கு மோங்குவன*
*நிதிக ளெங்கு முழவினொலி நிலங்க ளெங்கும் பொலஞ் சுடர்ப்பூ"*

வீதியில் சேரரையும் சேரமான் தோழரையும் கண்டார்கள் நகர மாந்தர்கள். அவர்கள் உள்ளக் களிப்பிற்கு அள வேது !! வார்த்தைகளை அள்ளி அள்ளிக் கொட்டுகின்றார்கள்.

*"நல்ல தோழர் நம்பெருமான் தமக்கு நம்பி யிவரென்பார்*
*எல்லை யில்லாத் தவமுன்பென் செய்தோ மிவரைத் தொழவென்பார்*
*செல்வ மினியென் பெறுவதுநஞ் சிலம்பு நாட்டுக் கெனவுரைப்பார்*
*சொல்லுந் தரமோ பெருமாள்செய் தொழிலைப் பாரீ ரெனத்தொழுவார்".*

மாளிகையில் தம்பிரான் தோழரை அரியாசனத்தில் அமர்வித்தார். தாமே அவர் பாதங்களை விளக்கினார் சேரலனார். பாத பூசையைப் பயபக்தியோடு புரிந்தார். வாசனைத் திரவியங்கள் சாத்தினார். ஆடை சாத்தினார். நவரத்தின மணி மாலைகள் அணிந்தார். மலர் மாலைகள் அணிந்தார். வன்றொண்டர்க்கு அணிந்தவை போக எஞ்சியவற்றைத் தமக்கு அணிந்து கொண்டார். இவ்வாறு முனைப்பாடியர் கோவைக் கொண்டு மகிழ்ந்தார் கோதையார்.

ஒருநாள் ஆவியிலும் இனிய ஆரூராரை நினைந்தார் நம்பியாரூரர். பொன்னும் மெய்ப்பொருளும் தருவானைப் போற்றிப் புறப்பட்டுச் சென்றார்.

ஆரூரில் அமர்ந்திருக்கும் நாளில் சேரர் பெருமாள்தனை நினைந்தார். சேரநாட்டிற்கு வந்துவிட்டார்.

அது கேட்ட சேர அரசர் மகிழ்ச்சியோடு முரசம் முழக்குவித்தார்.

"என் ஐயனணைந்தா னெனையாளும் அண்ண லணைந்தானரூரில், சைவனணைந்தானென்று னையாம் தலைவ னணைந்தான் தரணியெலாம் உய்யவணைந்தான் அணைந்தான்."

சிந்தை மகிழும் சேரலனார் திருவாரூரர் என்னும் இவர்கள் உடல் வேறு. உயிர் ஒன்றானார் போன்று ஆனார்கள். மலைநாட்டில் எங்கு பார்த்தாலும் அரனார் பூசையும் அடியார் சேவையுமாகத் திகழ்ந்தது.

ஆய செய்கையில் நாள் கழிந்திட ஒருநாள், வானவரம்பனார் திருமஞ்சனத் தொழிலின் பின் வந்து பார்த்தார். சுந்தரரைக் காணவில்லை.

ஆலாலசுந்தரராம் துணைவரைத் தேவர்கள் வெள்ளானையின் மீது ஏற்றிச் செல்வதைக் கண்டார். குதிரை மீது திருவஞ்சைக் களத்திற்குச் செல்வார். இட்ட மாஞ் சிவமந்திரத்தை விட்ட வெம்பரியின் செவியினில் விதியால் ஓதினார். குதிரை வானில் எழுந்து பாய்ந்தது. வன்றொண்டர் மேல் கொண்ட மாதங்கத்தை முட்ட எய்தியது. வலங்கொண்டு யானையின் முன்னாகச் சென்றது பரி.

திருக்கைலாசத் தென்திசை மணியிலில் தடை பட்டு நின்றனர் சேரலனார். பூங்கயிலாயத்தில் புண்ணியப் பொருளைத் தரிசித்த வன்றொண்டர் சேரரின் தடையினைச் செப்பினர். இறைவன் அருளால் அருளிப்பாடு பெற்றார் சேரர். பெருமான் சந்நிதானத்தில் ஆதி ஞானஉலா அரங்கேற்றினார். கணநாதர் பதம் பெற்றார். ஆங்கினிது அமர்ந்தனர் கோதையார்.

சேரமான்பெருமாள் நாயனார் சிவபிரானிடத்திற் செலுத்திய பேரன்பாற் சிவபூசை செய்யப்பெற்றார். பூசைமுடிவிற் சிலம்பொலி கேட்கப் பெற்றார். குறைவில்லாத படை வாகனங்கள் பெற்றார். திருமுகப்பாசுரம் பெற்றார். தம்பிரான் தோழரைத் துணையாகப் பெற்றார். கொடுப்பதற்குக் குறைவில்லாத செல்வம் பெற்றார். யாரும் யாவும் கழறியன அறியும் உணர்வு பெற்றார். வெள்ளையானை சேவித்துச் சுந்தரருடன் கைலையை அடைந்தார். ஆதி ஞானவுலா அரங்கேற்றினார். கணநாதரானார். இவை போல்வன இன்னும் அனேகம். அனேகம்.

## கதிர்காமம்

வெளியிற் செறிந்துபுவி யதனிற் பரந்தனலின்
மீதிற் படர்ந்துகாலின்
மேவிப் புகுந்தலர்கொ ணீரிற் பிறந்தைந்து
விதமாய்ப் பொருந்து பரிசு
எளிதிற் றெரிந்துனந லருளிற் பொருந்தமிக
விளிதிற் றெரித்தகருணை
யாரும் வரைந்தளவு மொழியத் தகுங்கொலுய
ரிமையம் முதல்வி
களியிற் பொருந்தியொரு வடிவிற் றுலங்கவிரு
கையிற் றழூஉங்கந்தனே
கருத்திற் கொளுங்கதிரை மலையின் மிசைக்குலவு
காலா யுதத்துவசனே
வளியின் மிகுந்தறிவு மூடிக் கலங்குமுனர்
வந்திங் கெனக்கருள் வைநீ
மாவைப் பதிக்கண்மயின் மீதிற் றுணைச்சத்தி
மருவத் துலங்குகுகனே.

திருவாசகச் சிந்தனை:

# குயிற் பத்து

- பண்டிதர் சி. அப்புத்துரை -

குயிலை முன்னிலைப்படுத்திப் பாடப்பட்ட பத்துத் திருப்பாடல்களைக் கொண்ட பகுதி என்னும் பொருளிற் குயிற்பத்து என்னும் பெயரை இப்பதிகம் உடையதாயது. கவிதைச் சுவையை அனுபவிக்கக் கூடிய வகையில் கிளி, தும்பி, வண்டு, குயில் முதலியவற்றை விளித்துப் பாடுவதொரு முறைமை புலவர்களிடம் இருந்தது. அந்த வகையிற் பாடல் செய்தவர்களுள் முதன்மையானவர் என்று போற்றப்படக் கூடியவர் மாணிக்கவாசக சுவாமிகள். குயிலுடன் உறவு கொண்டாடிக் குதூகலிப்பது போன்று இறைவனைப் போற்றியுள்ளார்கள் சுவாமிகள். சிவனைப் போற்றுவதாய கவிதை அழகினை ஒவ்வொரு பாடலிலும் பார்க்க முடிகின்றது. கவிதை அழகில் ஈடுபாடு கொண்டு இறைவனைப் பாடுவது மூலம் சதா இறைவனை மனத்துக் கொள்ளுகின்ற – இறைவனை அணுகுகின்ற – வாய்ப்பினை இத்திருப் பாடல்கள் உண்டாக்குகின்றன.

குயில் கூவுங்காலம் இளவேனிற்காலம். அந்தக் காலத்து மீண்டும் வருவேன் என்று சொல்லிப் போந்த தலைவனைக் காணாத தலைவி சோலை ஒன்றுட் புகுந்த வேளை, தலைவன் சிறைப்புறத்தானாகி நிற்பதை உணர்ந்து பாடுவதாக அமைந்தவை இத்திருப்பாடல்கள். ''கூவாய் என்பதன்றிச் சொல்லாய் என்னாமையின் தலைவன் சிறைப்புறத்தான் என்பது பெற்றாம்'', என்பர் பண்டிதமணி க. நவநீதகிருஷ்ண பாரதியார் அவர்கள்.

ஆத்ம விரக்கம் என்ற திருவாசகத் திருவுள்ளக்கிடையாற் குறிப்பிடப்படும் இப்பகுதி அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தச் செய்யுள்கள் பத்தினைக் கொண்டது. ஆத்மவிரக்கம் – ஆன்மா இறைவனை அடைய விரும்பி இரங்குதல்.

இப்பதிகத்துள்ள திருப்பாடல்கள் குறிப்பிடுவன:

1. கீழுள்ள ஏழுலகங்களுக்கும் அப் பாற்பட்டனவாகிய திருவடிகளை உடையவன்; அவன் திருமுடி சொல்லாற் சொல்லப்படக் கூடிய எல்லையையே கடந்தது. அதாவது சொல்லினாற் சொல்லி எல்லை காண முடியாதது. குணம் இல்லாதவன்; முடிபும் இல்லாதவன். அவ் வண்ணமானவனை இங்கு வரும்படி கூவுவாயாக.
2. குயிலே, அழகினையுடைய ஏழுலகினரும் வழிபட எல்லா உருவங்களையும் தன்னுருவமாகக் கொண்டவன், தென்னிலங்கை இராவணன் மனைவி மண்டோதரிக்கு பெருங் கருணை செய்த, திருப் பெருந்துறையில் எழுந்தருளியுள்ள பெருமானை உன்னுடைய சிறந்த வாயால் வரும்படி கூவி அழைப்பாயாக.
3. குயிலே, மணிகள் பதித்துச் செய்யப்பட்ட மாடங்களை உடைய மிக இனிய நல்லொழுக்கப் பயிற்சியை உடையவர்களைக் கொண்ட – திருவுத்தரகோச மங்கைக் கோயிலில் அழகுடன் விளங்குகின்ற பூங்கொடிபோன்ற உமாதேவியாருடனாகிய உலகம் விளக்கம் பெறும்படியாக இருந்தருளும் தலைவனை வரும்படியாகக் கூவுவாயாக.
4. குயிலே, விண்ணுலகை விட்டு நீங்கி மண்ணுலகிற் புகுந்து பேரின்பத்தை அளவின்றிக் கொடுக்கும் வள்ளன்மை உடையவனை, என் உள்ளத்திற் புகுந்து. அவனுணர்வாகும்படி செய்த ஒப்பற்றவனை, உமையம்மையின் மணாளனை வருமாறு கூவுவாயாக.

*வான் பழித்து: மேலவர் ஆகிய வானவரைக் கருத்திற் கொள்ளாது,*

அவனை ...க்கி, மண்ணுலகு புகுந்து, அங்குள்ளோர் பேரின்...க் கருதினமையால் வானுளோரை இக...ாகக் கொள்ளப்பட்டது.

5. ...பிலே, இருளை நீக்கும் ஒளிக்கதிர்களை உடைய சூரியனைப் போன்றவனாகிய சிவன் வானிடத்து நின்றும் இறங்கி அடியாரின் ஆசை இல்லாமற் செய்பவனும் உலகத்து முதலும் நடுவும் இறுதியும் ஆகிய பிரமன், திருமால், உருத்திரன் என்போர் அறிய முடியாத சிவந்த திருவடிகளை உடையவனும், தீரனுமாகிய பெருமானை வரும்படியாகக் கூவுவாயாக.

6. குயிலே, ஏழுலகங்களையும் ஆள்பவனும், அன்பனும், இனிய அமுதம் போன்று அடியார் மனத்துத் திகழ்பவனும் நல்ல குதிரை மீது வந்தவனும், திருப் பெருந்துறை நாதனுமாகிய பெருமானை வரும்படி கூவுவாயாக.

*கோகழி: திருப்பெருந்துறை*

7. குயிலே, பொன்னினும் உயர்வாகிய நிறத்தையுடைய அழகன், அரசன், குதிரை மீதிலமர்ந்து வந்த வள்ளல், திருப் பெருந்துறையை இடமாகக் கொண்டவன், பாண்டியன், சேரன், சோழன் எனும் அரசரானவன், சிறப்பான புயங்களை உடையவன் ஆகிய அவனை வரக் கூவுவாயானால், அவன் என்னை விரும்பியது போல யான் உன்னை விரும்புவேன். அவனை நீ கூடி இன்பம் அனுபவிப்பதற்கு யான் தோழியுமாவேன். எனவே அவனை வரும்படியாகக் கூவுவாயாக.

*பொன்னை அழித்த நன்மேனி: பொன் நிறத்தைத் தன் உயர்வினால் இல்லையா கும்படி செய்த திருமேனி.*

8. குயிலே, திருமாலும் அயனும் அடிமுடி தேடி ஒய்ந்து செயலிழந்து தம் நிலை நினைந்து நிற்ப, ஒளி மிகுந்த சோதியாகி வானைப் பிளந்து உயர்ந்து, விண்ணுலகையுங் கடந்து, பிரகாசிக்கின்ற சுடர்களுடனாகி நின்ற உண்மைப் பொருளானவனும், தாவி வருகின்ற குதிரைக்குப் பாகனாய் இருப்பவனும், தாழ்ந்த சடையை உடையவனும் ஆகிய தலைவன் வரும்படி கூவுவாயாக.

*ஒவி : செயல் அழிந்து, செயலிழந்து – தேடுவதை விட்டு*

9. குயிலே செந்தாமரை போன்ற திருமேனியை உடையவனும், பூவுலகத்திலே தன் திரு வடிகளை விளக்கமாக்கிப் பற்றுக்களை நீக்கி என்னை ஆண்டுகொண்ட அமுதம் போன்றவனை வரும்படி கூவுவாயாக.

10. குயிலே, ஒரு அந்தணனாகி இங்கே வந்து தன் அழகிய செம்மை பொருந்திய அடிகளைக்காட்டி, என் அன்பிற்குரியவர் என்று காட்டி அன்பற்ற என்னையும் ஆட் கொண்ட செந்தழல் போன்ற திருமேனியை உடைய பெருமானை வரும்படியாகக் கூவுவாயாக.

*கொந்து : கொத்து : பூங் கொத்து*

## போற்றித் தொழுக பெரியோரை

அரசன் உவாத்தியாயன் தாய் தந்தை தம்முன்
நிகரில் குரவர் இவர் இவரைத்
தேவரைப் போலத் தொழுது எழுக என்பதே
யாவரும் கண்ட நெறி.

மன்னன், கற்பித்த ஆசான், பெற்ற தாய் தந்தை, உடன் பிறந்த மூத்தோர் ஆகியோர் ; தமக்கு நிகரில்லாத பெரியோர் ஆவார்கள். இவர்களைக் கடவுளைப் போலப் போற்றித் தொழ வேண்டும் என்பதே நம் முன்னோர் எல்லோரும் மொழிந்த நல்வழியாகும்.

- நன்றி : ஆசாரக் கோவை.

# தெளிவான சமய அறிவும் எழிலான வாழ்க்கை அமைவும்

- முருகவேபரமநாதன் -

இந்த மனித வாழ்வு மேன்மையடையப் பக்குவமான நடைமுறைகள் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். மனித உற்பத்தி விலங்கினின்று வந்த தெனினும் வித்தியாசமானது. இவ்வுடம்பு ஆறறிவுக்கான அமைப்புடையது. இந்நியதியை எண்ணுங்கால் நிச்சயமாய் வாழப் பிறந்தது மானிடம். மானிடச் சட்டை தாங்கித்தான் இறைவனும் வருகிறான். மனித உடலிலேதான் பெரியோர்கள், ஞானிகள், தீர்க்கத்தரிசிகள் அதிமானிடர்கள் தோன்றினார்கள். இந்த நிலைப்பாடே போதும் மனிதப் பிறப்பின் மாண்பைப் புரிய வைக்க. இவ்வாழ்வியல் வனப்புறவும், வண்ண வடிவம் பெறவும், தக்கபயன் காணவும். தீர்க்க தரிசிகளாலும், மக்களாலும், இயற்கை யாகவும், சிலபோது தெய்வீகத்தாலும் ஒரு ஒழுங்கு மருங்கான வாழ்வின் சட்டங்கள் வார்க்கப்பட்டு, ஒழுங்கு நடைமுறையுடன் செயற்படுத்தப்பட்டது, ஆற்றுப் படுத்தப்பட்டது. அப்போகண்ட பிழைகளை நீக்கி மாசுமறுவற்ற கொள்கைகள் உரு வாக்கப்பட்டு மேன்மைசார் நீதிவழி பேணப் பட்டபாதை, அல்லது வாழ்க்கை முறை, அதியுயர்ந்த தெய்வத்தோடு சேர்க்கப்பட அது சமயம் ஆனது. இச்சமயம், பலவானாலும், பலவாறானாலும் கைக் கொண்டவர் மனிதர்களே. சமயத்தை மேல் நாட்டுச் சிந்தனையாளர் தேன் கூடு என்றனர். நம்நாட்டார் ஆறுநதி என்றனர் பேருருக்குப் போகும் பாதையும் என்றனர். ஆகவே சிந்திக்கும் திறம்படைத்த மனிதன் அதுபற்றித் தெளிவுபட விரும்பினான். ஒவ்வொரு மேதைகளும், வழிவழி வந்தோரும், புதியவர்களும் ஏதேதோ சொல்கின்றனர்.

எனினும் நாம் சைவம் பேணும் சமயிகள். சைவம் என்பர், இந்து என்பர் அதிலேயும் அத்வைதம், துவைதம், விசிட்டாத்வைதம் என்பர். வேதாந்தமென்பர், சித்தாந்தம் என்பர், சமரசம் என்பர். எதைநாம் கடைப்பிடிப்பது. இப்போ எம்மோடு, ஒவ்வாத ஒத்துப் போகாத ஏனைய சமயங்களையும், கலந்து பேசுவர். அப்படியாயின் நாமேன் சைவம் பேண வேண்டும். சைவசமயிகள் என நாமம் தாங்கி முத்திரைகுத்த வேண்டும். இச்சங்கடமான நிலையால் சைவம் நலியவும் கூடும். எது எப்படியாயினும் நாம் உறைத்த சமயவாதிகளாய் இருப்பதே எம் உறுதிப்பாட்டை காப்பாற்றும். நமக்கோர் ஆலயம், நடைமுறை வழிபாடு வகுத்தமுறைகள், பண்பாட்டுக் கோலங்கள் எனப் பல உண்டு. எனவே ஏமாந்து ஏமாற்றப்படாமல் முதல் நமது சமய உண்மைகளைத் தெளிவாகக் கற்று நடந்து வாழ்வோம் எனின் தான் தெளிவு பெறப்படும். இன்னோர் முறையாகக் கூறின் தெளிவான சமய, அடிப்படை அறிவு ஒவ்வொருவர்க்கும் இன்றியமையாதது ஆகும். இதனால் உள்ளத் தெளிவால் வாழ்வு ஆளுமைகள் விழுமியப்படும். மனித விழுமியங்கள், சமுதாய உயர்தன்மைகள் வளர்க்கப்பட்டு வாழ்வு செந்நெறியில் முன்னேறவழி பிறக்கும். எனவே எந்த வகையிலும் தெளிவான சமய அறிவு சாதனா மார்க்கமாக்கப்பட்டு மனிதனைச் (Super Man) அதிஉயர்ந்த மனிதன் ஆக்கும். இந்தச் சமய நாட்டமும் சற்சனர் கூட்டமும், ஞானமும் கல்வியும் தெளிவை அளிப்பதால் எழிலான வாழ்வு ஆரோக்கியமான நீரோட்டத்துடன் சங்கமமாகி சுகாதாரமான வாழ்வாய் மலரும் அதுவே வைபத்து வாழ்வாகி, வாழ்வாங்கு வாழும் வாழ்வாகும். மெய்ஞ்ஞானமும் விஞ்ஞானமும் இணைய மெய்ம்மை மேன்மையாகும் மேன்மை கொள் சைவநீதியாகும்.

சைவப் பாடசாலைகளில் நாவலர் தந்த சைவ வினாவிடை படிப்பிக்கப்பட்டமையும் நான்காம் பால பாடம் படிப்பதும் வழக்கம். இப்படியான கருதுகோள் மக்கள் மட்டத்தில் மட்டற்ற நன்மையளித்து நற்பயன் தந்தது எனலாம். மேலும் ஆலயம், பொதுச் சங்கங்கள், சமயவகுப்பு சைவப் புலவர், பண்டிதர் பரீட்சைகள்,

சொற்பொழிவுகள், சமயப் போட்டிகள், பண்ணிசை, புராணபடனம், கதாப்பிரசங்கங்கள் பட்டி தொட்டிநகர் என்று இருந்தன. இப்படியான [illegible] இளஞ்சமுதாயத்துக்கு சைவசமய தமிழ் [illegible] பரவலாக அளித்தன எனலாம்.

[illegible]ட்டிலே சைவ ஆசார அநுஷ்டானம் பேணப்படும். பழக்க வழக்கம், ஒழுக்கம், சீலம், ஒழுங்கு கட்டி வளர்க்கப்பட்டது. பெரியோர்க்கு அடங்குதல், மதித்தல், பெற்றோரைப் பேணல், காலைக் கடன் மாலைக் கடன் இவைபற்றிய தெளிவான விளக்கங்கள், திருநீறு பூசும் கட்டாய வாடிக்கை, உருத்திராட்ச மகிமை. மக்களின் வாழ்வோடு செறிந்தன. இருமுனைகள் மட்டுமல்ல (சமய – தமிழ்) சமுதாய நெறி, சமூக இயற்பாட நெறி போன்ற வாழ்வியற் கட்டகம் மக்களை மேன்மையடையவும் செய்தன. கண்டிப்பு, தண்டிப்பு வழிப்படுத்தல், கடமை உணர்வுகள் பிள்ளைகளை செந்நெறிப்படுத்தின.

ஆனாலும் நாம் நம் சமய வாழ்விலும், தாய்மொழி உணர்விலும் மட்டுமன்றி நற்பிரஜைகளாக, நாகரிக சமுதாயமாக, பண்பாட்டின் சின்னங்களாக, சுறுசுறுப் புள்ளவர்களா வாழ வேண்டும். கலை கலாசாரம், பண்பாடு நாகரிகம் நமது இலச்சினைகள். இவை மணக்க நாம் ஒவ்வொரு செயற்றிறனாலும் நீள்மை காட்ட வேண்டும். ஒரு ஐக்கியமான சமுதாய கோட்பாட்டுடன் இயங்கி எதை முன்னெடுத்துச் செல்ல வேண்டுமோ அதை முழுமூச்சுடன் சேர்த்துக் கொண்டு சமுதாய விழுமிய நலன் சிதையாமல் இணைக்கவும், அழகான போற்றக் கூடிய வாழ்வை அமைக்கவும் நாம் சமயத்தின் தெளிந்த ஞானமும், மொழியியல் திறமையும் பெற்று நமது சகல திறமைகளையும் கூட்டி வளர்த்து உலக வழி தாயகத்தில் உத்தம இடம் பெற உழைப்போமாக. இம் மென்மையே மேன்மையாகி செம்மை சேர்க்கும். இதுவே மங்களகரமான சிவவாழ்வாம். இதற்கு நாம் ஆயத்தம் செய்வோம்.

இந்நெறிக்கு உயர்ந்த கல்வியும், ஒப்பீடும், தன்மொழிப் புலமையும் இழைய வேண்டும் இந்நெறிப்பாட்டை நாம் பிறந்த பூமியிலே பன்முகப்பட்ட நோக்குச் செயற்றிறனாற் தான் பெற்றோம், பெற்றார்கள் பெற்றுக் கொண்டிருந்தார்கள். ஒரு கூட்டமே இதை இலக்காகக் கொண்டு செயற்பட்டமையால் நம் செவ்விய சமுதாயம் உருவானது எனலாம். உயர்ந்தவர், தாழ்ந்தவர், பெண், ஆண், சாதிமான் – குறைந்தவன் என்ற பழமைமாறி சகோதரத்தும், கடமை, சேவை, காருண்யம், இரக்கம், நேயம், (அன்பு) விநயம் (பணிவு) பண்பு (பண்பாடு சான்றாண்மை (சால்பு) போன்ற வள்ளுவ நெறிகளால் வியந்தோதப்பட்ட குண மனஇயல்புகளுடன் மனிதம் பூத்த சுத்தமான சமுதாயநலன்பேணும் வழியில் நம்மைச் சமயம் முன்னீடு செய்யாதபோது வேண்டுமா சமயம். பூசல், காழ்ப்பு, சந்தேகம் பகைமை எதிர்ப்புணர்வு வர்க்க இனபேதம் ஒழிந்து சமுதாய நலம் வழிந்தோட வேண்டும். மனமுள்ள மானிடரெங்கும் மனிதராக உலாவவும் வேண்டும்.

சாதுரியமான, சிரத்தைகளும், சிரவணமும், ஒழுகலாறும், எண்ணமும் செயற்பாடுமென்ற இன்னோரன்ன பண்பும், பழக்க வழக்கம், ஆசாரம், சீலம், நோன்பு போன்ற நாகரிக நண்பியலும் கலந்து புனித கங்கையெனச் சல சலத்தோடும் போது நாம் பொது கொள்வோம். மெதுமை காண்போம்.

நமது ஈழ மண்ணில் தாய் மொழியும், சமயமும் கட்டாய பாடங்கள். இதனாலே சைவ சமயம், தமிழ் இரண்டும் விருப்பமாகவோ வெறுப்பாகவோ மாணவர்கள் படித்தார்கள். தமிழகத்தில் இல்லை இந்நெறி. எனவே பாடத்திட்டக் கற்கை நெறிகள், பாடநூல்கள் அரசாங்கத்தார் தயார் செய்யப்பட்டு வழங்கப்பட்டது, ஆசிரியர்களும் ஆயத்தம் செய்யப்பட்டனர். பயிற்சிக்கலாசாலையிலும், நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆசிரியர்கட்கு சேவையாற்றும் போதே இடை இடையே கல்வி, சமய வல்லார்களால் ஊக்குவிப்பு நடந்தது மட்டுமல்ல பலர் கற்று மேன்மை கண்டனர். பரவலாக அறிவு பெற்றனர். ஆங்கில மொழி மூலம் படித்தவர்கட்கு Hindusim, Sawasim என்ற நூல்கள் சைவப் பெரியார் சிவபாத சுந்தரனாரால் எழுதி வழங்கப்பட்டது. விவேகானந்த சபைப் பரீட்சைகள் நடத்தி உயர் பரிசுகள் வழங்கினர். நானாவிதமான முயற்சிகள் நடைமுறைகள் சமய ஞானத்தையும், மொழி அறிவையும் இளந்தலை முறையினர்க்கு ஊட்டின எனலாம்.

# சிவாலய தரிசன இயல்

- ஆறுமுகநாவலர் -

1. **சிவபெருமானை வழிபடுதற்கு உரிய முக்கிய ஸ்தானம் யாது?**
திருக்கோயில்

2. **திருக்கோயிலுக்கு எப்படிப் போதல் வேண்டும்?**
ஸ்நானஞ் செய்து, தோய்த்து உலர்ந்த வஸ்திரந் தரித்து, விபூதி இட்டுக் கொண்டு போதல் வேண்டும்.

3. **திருக்கோயிலுக்குச் சமீபித்த உடனே யாது செய்தல் வேண்டும்?**
தூலலிங்கமாகிய திருக்கோபுரத்தைத் தரிசித்து, இரண்டு கைகளையுஞ் சிரசிலே குவித்து, சிவநாமங்களை உச்சரித்துக் கொண்டு உள்ளே போதல் வேண்டும்.

4. **திருக்கோயிலின் உள்ளே போனவுடன் யாது செய்தல் வேண்டும்?**
பலிபீடத்துக்கு இப்பால் நமஸ்காரம் பண்ணல் வேண்டும்.

5. **கிழக்கு நோக்கிய சந்நிதானத்திலும், மேற்கு நோக்கிய சந்நிதானத்திலும், எந்தத் திக்கிலே தலைவைத்து நமஸ்காரம் பண்ணல் வேண்டும்?**
வடக்கே தலைவைத்து நமஸ்காரம் பண்ணல் வேண்டும்.

6. **தெற்குநோக்கிய சந்நிதானத்திலும், வட்க்கு நோக்கிய சந்நிதானத்திலும் எந்தத் திக்கிலே தலைவைத்து நமஸ்காரம் பண்ணல் லேண்டும்?**
கிழக்கே தலைவைத்து நமஸ்காரம் பண்ணல் வேண்டும்.

7. **எந்தத் திக்குகளிலே கால்நீட்டி நமஸ்காரம் பண்ணல் ஆகாது?**
கிழக்கிலும், வடக்கிலும் கால்நீட்டி நமஸ்காரம் பண்ணல் ஆகாது.

8. **ஆடவர்கள் என்ன நமஸ்காரம் பண்ணல் வேண்டும்?**
அட்டாங்க நமஸ்காரம் பண்ணல் வேண்டும்.

9. **அட்டாங்க நமஸ்காரமாவது யாது?**
தலை, கை இரண்டு, செவி இரண்டு, மோவாய், புயங்கள் இரண்டு என்னும் எட்டு அவயங்களும் நிலத்திலே பொருந்தும்படி வணங்குதல்.

10. **பெண்கள் என்ன நமஸ்காரம் பண்ணல் வேண்டும்?**
பஞ்சாங்க நமஸ்காரம் பண்ணல் வேண்டும்.

11. **பஞ்சாங்க நமஸ்காரமாவது யாது?**
தலை, கை இரண்டு, முழந்தாள் இரண்டு என்னும் ஐந்து அவயங்களும் நிலத்திலே பொருந்தும்படி வணங்குதல்.

12. **நமஸ்காரம் எத்தனை தரம் பண்ணல் வேண்டும்?**
மூன்று தரமாயினும், ஐந்து தரமாயினும், ஏழு தரமாயினும், ஒன்பது தரமாயினும் பண்ணல் வேண்டும். ஒருதரம், இருதரம் பண்ணுதல் குற்றம்.

13. **நமஸ்காரம் பண்ணியபின் யாது செய்தல் வேண்டும்?**
பிரதக்ஷிணம் பண்ணல் வேண்டும்.

14. **எப்படிப் பிரதக்ஷிணம் பண்ணல் வேண்டும்?**
இரண்டு கைகளையும் சிரசிலேனும் மார்பிலேனுங் குவித்து, சிவநாமங்களை உச்சரித்துக் கொண்டு, கால்களை மெல்ல வைத்துப் பிரதக்ஷிணம் பணல் வேண்டும்.

15. **பிரதக்ஷிணம் எத்தனை தரம் பண்ணல் வேண்டும்?**
மூன்று தரமாயினும், ஐந்து தரமாயினும், ஏழு தரமாயினும், ஒன்பது தரமாயினும் பண்ணல் வேண்டும்.

16. **சுவாமி சந்நிதானங்களை எந்த முறையாகத் தரிசனஞ் செய்தல் வேண்டும்?**
முன் விக்கினேஸ்வரரைத் தரிசனஞ் செய்து பின் சிவலிங்கப் பெருமானையும், உமா தேவியாரையுந் தரிசனஞ்செய்து, விபூதி வாங்கித் தரித்துக் கொண்டு, அதன்பின் சபாபதி, தக்ஷிணாமூர்த்தி, சோமாஸ்கந்தர், சந்திரசேகரர், சுப்பிரமணியர் முதலிய மூர்த்திகளைத் தரிசனஞ் செய்தல் வேண்டும்.

17. விக்கினேசுவரரைத் தரிசிக்கும் பொழுது யாது செய்தல் வேண்டும்?
முட்டியாகப் பிடித்த இரண்டு கைகளினாலும் நெற்றியிலே மூன்றுமுறை குட்டி, வலக்காதை இடக்கையினாலும், இடக்காதை வலக்கையினாலும் பிடித்துக் கொண்டு, மூன்றுமுறை தாழ்ந்து எழுந்து கும்பிடல் வேண்டும்.

18. சந்நிதானங்களிலே தரிசனம் பண்ணும்போதெல்லாம் யாது செய்தல் வேண்டும்?
இரண்டு கைகளையுஞ் சிரசில் ஆயினும், மார்பில் ஆயினும் குவித்துக் கொண்டு, மனங்கசிந்துருகத் தோத்திரஞ் செய்தல் வேண்டும்.

19. எந்தக் காலத்திலே சுவாமி தரிசனஞ் செய்தல் ஆகாது?
அபிஷேகம், நிவேதனம் முதலியவை நடக்கும் பொழுது தரிசனஞ் செய்தல் ஆகாது.

20. அபிஷேக காலத்தில் பிரதக்ஷிண நமஸ்காரங்களும் பண்ணல் ஆகாதா?
அப்பொழுது உட்பிரகாரத்திலே பண்ணல் ஆகாது.

21. தரிசனம் முடிந்தவுடன் யாது செய்தல் வேண்டும்?
சண்டேசுரர் சந்நிதியை அடைந்து, கும்பிட்டு, மூன்றுமுறை கைகொட்டி, சிவதரிசன பலத்தைத் தரும் பொருட்டுப் பிரார்த்தித்தல் வேண்டும்.

22. சண்டேசுர தரிசனத்தின் பின் யாது செய்தல் வேண்டும்?
சிவ சந்நிதானத்தை அடைந்து நமஸ்காரம் பண்ணி, இருந்து ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தில் இயன்ற உருச்செபித்துக் கொண்டு-எழுந்து வீட்டுக்குப் போதல் வேண்டும்.

23. நித்தியமும் நியமமாக ஆலயதரிசனஞ் செய்ய இயலாதவர் யாது செய்தல் வேண்டும்?
சோமவாரம், மங்கலவாரம், சுக்கிரவாரம், பிரதோஷம், பௌர்ணிமை, அமாவாசை, திருவாதிரை, கார்த்திகை, மாதப்பிறப்பு, சூரிய கிரணகணம், சந்திரகிரகணம், சிவராத்திரி, நவராத்திரி முதலிய புண்ணிய காலங்களில் ஆயினுந் தரிசனஞ் செய்தல் வேண்டும்.

24. திருக்கோயிலிலே செய்யத் தகாத குற்றங்கள் யாவை?
ஆசாரம் இல்லாது போதல், கால் கழுவாது போதல், எச்சில் உமிழ்தல், மலசலங் கழித்தல், மூக்குநீர் சிந்துதல், ஆசனத்து இருத்தல், சயனித்தல், காலை நீட்டிக் கொண்டு இருத்தல், மயிர் கோதி முடித்தல், சூதாடல், பாக்கு வெற்றிலை உண்டல், சிரசிலே வஸ்திரந்தரித்துக் கொள்ளுதல், தோளிலே உத்தரீயம் இட்டுக் கொள்ளுதல், சட்டை இட்டுக் கொள்ளுதல், பாதரக்ஷை இட்டுக் கொள்ளுதல், விக்கிரகத்தைத் தொடுதல், நிருமாலியத்தைக் கடத்தல், நிருமாலியத்தை மிதித்தல், தூபி, துவசத் தம்பம், பலிபீடம், விக்கிரகம் என்னும் இவற்றின் நிழலை மிதித்தல், வீண்வார்த்தை பேசல், சிரித்தல், சண்டை இடுதல், விளையாடுதல், சுவாமிக்கும் பலிபீடத்துக்கும் குறுக்கே போதல் முதலியவையாம்.

நன்றி : முதலாஞ் சைவ வினாவிடை

உ
சிவமயம்

# வாசகர் கருத்து

சைவநீதி வரவர ஒளி பெறுகிறது. ஸ்மார்த்த இருளைத் துரத்தியடிக்குமளவுக்கு அதன் ஒளிப்பிரபாவம் வீறு பெற வேண்டும். பெற்றாகும்

- மகாமகோ உளத்தியாய, பண்டிதர் மு. கந்தையா

சைவநீதி சைவத்தை ஒளிரவைக்கும் சிறப்பிதழாக உயர்வு பெறுகிறது. சைவநீதி வழி வளர்க. என்றும் வேண்டும் இன்ப அன்பு.

- ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள், யாழ். நல்லையாதீனம்.

இந்தியப் பதிப்புக்கள் போன்ற அழகைக் காண்கின்றேன்........... பிழைகளைத் தவிர்க்க வேண்டும். இலங்கையிற் சைவநீதிக்கென்று வெளிவரும் ஒரேயொரு இதழ் இது.

- தர்ஷினி கனகரத்தினம், கந்தர்மடம்

உ

சிவமயம்

# சுந்தரமூர்த்தி சுவாமிகள் துதி

நாட்டார் அறிய முன்னாளில்
நன்னாள் உலந்த ஐம்படையின்
பூட்டார் மார்பிற் சிறியமறைப்
புதல்வன் தன்னைப் புக்கொளியூர்த்
தாட்டா மரையின் மடுவின்கண்
தனிமா முதலை வாய்நின்றும்
மீட்டார் கழல்கள் நினைவாரை
மீளா வழியின் மீட்பனவே.

- சேக்கிழார்

*(ஆடிச் சோதி - சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை)*


## சைவநீதி - சந்தா விபரம்

| தனிப்பிரதி | | | வருடச்சந்தா | | |
|---|---|---|---|---|---|
| இலங்கையில் | - | ரூபா 25.00 | இலங்கையில் | - | ரூபா 250.00 |
| இந்தியாவில் | - | ரூபா 25.00 (இந்திய ரூபா) | இந்தியாவில் | - | ரூபா 250.00 (இந்திய ரூபா) |

ஏனைய நாடுகளில் ஸ்ரேலிங் பவுண் 10 அல்லது US $ 15. சைவநீதியின் வளர்ச்சிக்கு உங்கள் ஒவ்வொருவரதும் பங்களிப்புப் பெரிதும் வேண்டப்படும்.

சந்தா அனுப்பப்பட வேண்டிய முகவரி:

**S. NAVANEETHAKUMAR,**
42, Janaki Lane,
Colombo - 04,
Sri Lanka.

# சைவநீதி
# SAIVANEETHI

## ஒல்லுடை ஞானவயிரவர் ஆலயம்





கருவறைத் தூபி



மணிக் கோபுரம்

நாகதம்பிரான் தூபி

Regd. No. QD/37/ News 99. இவ்விதழ் சைவநீதி நிறுவனத்தினரால் 48B, புளூமெண்டோல் வீதி, கொழும்பு 13 என்னும் முகவரியிலுள்ள யுனி ஆர்ட்ஸ் இல் அச்சிட்டு 1999. 08. 02 இல் வெளியிடப்பட்டது.



மகாமண்டபத் தூபி

Cover Design by: Kathir 074-614644, 071-711983